# இறையியல் கோலங்கள்

வடிவம் 21 மார்ச், ஜூன் 2008 வண்ணம் 1,2

## கிறிஸ்து இயல்

**அழகமையைத் தேடி...**
அருட்சகோ. ஜெ. எல்மோ அருள்நேசன்

**இயேசு பற்றிய முன்னறிவிப்பு**
அருட்சகோ. கீ. லக்ஸ்மன்

**இறையாட்சி பற்றிய இயேசுவின் போதனை**
அருட்சகோதரி ம. விக்ரறின் செல்வதி தி.கு.

**துன்பமும் சாவும் எதற்காக?**
அருட்சகோ. தா. ஆன்சன் றெஜிக்குமார் அ.ம.தி

**தூய பவுலின் திருமடல்களில் தூய ஆவியார்**
அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்

**லெயோன்ஸ் நகரத்து புனித இரனேயஸ்**
அருட்சகோ. தி. குயின்சன் பெர்னாண்டோ

தூ[illegible] வேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

*Tamil Theological Quarterly*


Vol. : 21
No. : 1,2
March, June : 2008

வடிவம் : 21
வண்ணம் : 1,2
மார்ச், ஜூன் : 2008



தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர் :**

அருட்தந்தை ச. வி. ப. மங்களராஜா

**துணை ஆசிரியர்கள் :**

அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம்
அருட்தந்தை அ. யோ. ஜெயசீலன்

**நிர்வாக குழு :**

அருட்சகோ. அ.ஜெ. அ. ஜெயரஞ்சன்
அருட்சகோ. ஆ. மைக் மயூரன்
அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்
அருட்சகோ. கீ. லக்ஸ்மன்
அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்
அருட்சகோ. பெ. சதீஸ்குமார்
அருட்சகோ. தி. குயின்சன் பெர்ணான்டோ

**வெளியீடு :** தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

## Editor :

Rev. Fr. S. V. B. Mangalarajah

## Sub Editors :

Rev. Fr. P. J. Jebaratnam
Rev. Fr. A. J. Jeyaseelan

## Administrative Board :

Rev. Bro. A. J.A. Jeyaranjan
Rev. Bro. A. Mac Mayooran
Rev. Bro. A. Justin
Rev. Bro. K. Luxman
Rev. Bro. P. Renard Cherilnes
Rev. Bro. B. Satheeskumar
Rev. Bro. T. Quinson Fernando

**Publication** : **St. Francis Xavier's Seminary,**
**Columbuthurai, Jaffna, Sri Lanka.**
**Tel No.: 021 222 2482, 021 222 7145.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிக்கின்றோம்



பிறப்பு : 12-04-1951

குருத்துவதிருப்பொழிவு : 25-09-1989

இறப்பு : 20-04-2008

## அமரர் அருட்தந்தை ம. சே. கருணாரட்ணம் அடிகள்

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் பழைய மாணவர்

காற்றில் பறந்த கிளியாக
நீதிக்காய் ஓங்கிய கீ... கீ... சத்தம்
ஆன்மாவைத் தேடி ஓடி
அன்புடன் சொன்ன "கிறிஸ்துவிற்குப் புகழ்"
குண்டுகளை குரல்வளையால் ஏந்தி
குருத்துவத்தில் ஊறிய இரத்தம்
தடம் புரண்ட வழிகளிலெல்லாம்
தைரியத்துடன் சுட்டி நின்ற விடுதலை
எண்ணிலடங்கா எதிர்ப்புக்கள் எழுந்த போதும்
எளியவரின் துயர் துடைத்த கரங்கள்
காலதேவன் கண்வைத்துக் கலைத்தபோதும்
ஆனந்தமாய் பாடித்திரிந்தீரே இறைபுகழ்!
காயங்கள் பல சுமக்கின்றோம்
காலத்தால் அழியா உம் பிரிவால்
மீட்கின்றோம் ஜெப பாமாலை – உமது
மறுவாழ்வுப் பயணத்திற்காய்

- நிர்வாகக்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



பிறப்பு : 12-10-1952

குருத்துவதிருப்பொழிவு : 30-04-1980

ஆயராக திருநிலைப்படுத்தல் : 24-05-2008

## அதிவந். பொன்னையா ஜோசப் ஆண்டகை

(துணை ஆயர் - திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்)

இறையவன் அழைப்பில் - உமை
உவகையுடன் உவந்தளித்து
அலைந்திடும் மந்தைகளை
இருகரம் நீட்டி அரவணைக்க
துணை ஆயனாய் பொறுப்பேற்கும் தந்தையே
இறையருள் வேண்டி வாழ்த்துகிறோம்

- நிர்வாகக்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



பிறப்பு : 09-12-1936

குருத்துவதிருப்பொழிவு : 20-12-1961

ஆயராக திருநிலைப்படுத்தல் : 07-05-1983

## அதிவந். ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை

(ஆயர் - திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்)

உண்மை உறவின் மேய்ப்பனாய்
மந்தையுடன் மந்தையாய் - கிளைகள்
கொண்ட துன்ப ஆற்றில் நீராடி
துணிவுடன் இறை பணியில் - யூபிலி
கண்டிட்ட நல்லாயனே - தொடர்ந்து
மந்தைகளை இறைவழியில் வழிநடத்த
வாழ்த்துகின்றோம்.

- நிர்வாகக்குழு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. ஆசிரியரிடமிருந்து .....

02. எமது திருத்தந்தை பேசுகிறார்

03. அடிமையைத் தேடி ....

அருட்சகோ. ஜெ. எல்மோ அருள்நேசன்

04. இயேசு பற்றிய முன்னறிவிப்பு

அருட்சகோ. கீ. லக்ஸ்மன்

05. இறையாட்சி பற்றிய இயேசுவின் போதனை

அருட்சகோதரி விக்ரறின் செல்வதி மலக்கியாஸ் தி.கு.

06. துன்பமும் சாவும் எதற்காக?

அருட்சகோ. தா. ஆன்சன் றெஜிக்குமார் அ.ம.தி

07. தூய பவுலின் திருமடல்களில் தூய ஆவியார்

அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்

08. இவ்விதழின் இறையியலாளர்

– லெயோன்ஸ் நகரத்து புனித இரனேயுஸ்

அருட்சகோ. தி. குயின்சன் பெர்னாண்டோ

09. Synopsis

10. குறுக்கெழுத்துப் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

"................எமது மறை மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஆரம்பமாகிய ஐந்து ஆண்டு புதுப்பித்தல் திட்டம் "ஆண்டவரே நீர் யார்?" என்ற புனித பவுலின் கேள்வியோடுதான் முன்னெடுக்கப்பட்டது.

இவ்விதழானது கிறிஸ்து இயலை அடிப்படையாகக் கொண்டு இக்கேள்விக்கான பதில்களைத் தேடும் கட்டுரைகளையும், புனித பவுலின் ஆண்டை சிறப்பிக்கும் கட்டுரையையும் மற்றும் வழமையான ஆக்கங்களையும் கொண்டு வெளிவருகிறது.

கிறிஸ்துவை நாம் விண்ணிலே வாழும் ஒரு தெய்வமாக அல்லது அற்புதங்கள் புரியும் ஒரு வல்லவராக மட்டும் அனுபவிக்கின்ற விசுவாசத்திலிருந்து இன்னும் ஒரு படி மேலே சென்று வரலாற்றில் வாழ்ந்த கிறிஸ்துவின் பரிணாமங்களையும் தெளிவாக உள்வாங்கும் போதுதான் எமது விசுவாசம் முதிர்ச்சியடைகின்றது என்பது நாம் மறத்தலாகாது.

மனிதனோடு தம்மை ஒன்றுபடுத்திய இயேசு இறைவனை நமக்கு வெளிப்படுத்தி ஒரு புதிய சமுதாயம் உருவாக்கிட ஆற்றல் வழங்குகின்றார். அவர் அறிவித்த "கடவுளாட்சி" இன்று யதார்த்தமாக மாறிட நாம் ஒவ்வொருவரும் உழைக்க முன்வர வேண்டும். இதற்கு உதவியாக வரலாற்றில் வாழ்ந்த இயேசுவின் வாழ்வையும் போதனையையும் இன்று வாழும் மக்களுக்கு புரியும்படியாக எழுத்துருவில் கொண்டுவருவதே இக்கட்டுரைகளின் நோக்கமாகும்.

மீண்டும் எமது தேசத்தில் ஏற்பட்டுள்ள மோசமான அரசியல் சூழல் எமது சஞ்சிகையின் வெளியீட்டில் ஏற்படுத்தியுள்ள தாமதத்தை வாசகர்கள் விளக்கிக் கொள்வார்கள் என்பது எமது நம்பிக்கை.

அருட்திரு. ப.யோ. ஜெபரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது திருத்தந்தை பேசுகிறார்:

## தொடர்பு சாதனங்கள் உண்மைத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்.



கத்தோலிக்க பல்கலைக்கழங்களின் சமூகத் தொடர்பு பீடங்களின் பணிபற்றி திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பின்வருமாறு கூறுகின்றார்.

"உரையாடல், செபம், கற்பித்தல், சாட்சியம் பகர்தல், எடுத்துரைத்தல் போன்ற தொடர்புகளும், அச்சகங்கள், மின்னியல் சாதனங்கள், சித்திரங்கள், இசை, தொனி, ஆடல் பாடல் போன்ற கருவிகளும் மனிதனுடைய அடிப்படை இயல்பை வெளிப்படுத்தும் ஊடகங்களாத் திகழ்கின்றன.

இருப்பினும் தொடர்பு என்பது எமது மனித ஆற்றலின் ஒரு எளிமையான வெளிப்பாடல்ல. விவிலிய அடிப்படையில் இது தந்தை, மகன், தூய ஆவியாகிய திரிஏக இறைவனின் படைக்கின்ற, வெளிப்படுத்துகின்ற அன்பில் பங்கு கொள்ளும் செயற்பாடாகும்.

தன்னோடு இணைந்திருக்குமாறு எம்மை படைத்த இறைவன் தொடர்பு கொள்ளும் ஆற்றலை எமக்கு ஒரு கொடையாகத் தந்திருக்கின்றார். ஏனென்றால் நாம் அவரோடு இணைந்திருக்க வேண்டுமாயின், தனிநபர்களாக அல்லாமல் எமது அன்புறவு மூலமாக இறைவனுக்கும் அயலாருக்கும் பணிபுரிகின்ற செயலினூடாகவே அதனை அனுபவிக்க முடியும்.

இப்படியான ஒரு அன்புறவை ஏற்படுத்துகின்ற தொடர்களில் இருக்கவேண்டிய மிகவும் அவசியமான பண்பு உண்மைத்தன்மை ஆகும். ஒரு அறிவுறுத்தலையோ, ஒரு கற்பித்தலையோ, ஒரு ஆறுதலையோ, ஒரு மகிழ்ச்சியையோ வெளிப்படுத்தும் போது அதன் பெறுமதி அவைகளின் உண்மைத்தன்மையிலே தங்கியுள்ளது. உண்மைத்தன்மை இல்லாத ஒரு தொடர்பு அழிவையே ஏற்படுத்தும். ஒரு போதும் பலன் கொடுக்காது".

(சமூகத்தொடர்பு பீட மாநாட்டில் திருத்தந்தை ஆற்றிய உரையிலிருந்து...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமையைத் தேடி...

அருட்சகோ. ஜெ. எஸ்மோ அருள்நேசன்

## அறிமுகம்

மனிதனைத்தேடி இறைவன் மண்ணுலகிற்கு வந்தமைதான் கிறிஸ்தவத்தின் தனித்துவம் ஆகும். பிற சமயங்களிலே இருந்து கிறிஸ்தவம் எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றது என்பதனைக் குறித்து அழகாக விபரித்துக் காட்டும் ஓர் உருவக நிகழ்வினை இவ்விடத்திலே குறிப்பிடுவது பொருத்தமானது. ஒரு பாதையோரமாகச் சென்றுகொண்டிருந்த வழிப்போக்கன் தவறுதலாக ஒரு பாழ்ங் கிணற்றுக்குள் விழநேரிட்டது. அவன் எவ்வளவோ கூக்குரல் இட்டும் அவனுக்கு உதவிபுரிவார் எவருமில்லை. சிறிது நேரம் கழித்து அவ்வழியே ஒருவர் வந்தார். அவர் அக்கிணற்றையும், அவனையும் நோக்கினார். சிறிது நேரம் அவனுக்காகப் பரிதாபப்பட்டார் பின் அவ்வழியே சென்றுவிட்டார். அதன்பின் இன்னொருவர் வந்தார். அவரும் அவனைப்பார்த்து அவனது கவனயீனத்தினைக் கடிந்து கொண்டு அவன் எவ்வாறு முயன்றால் மேலே வரமுடியும் என்பதனைக் கற்பித்துவிட்டு அவ்வழியே சென்றுவிட்டார். ஈற்றிலே கிறிஸ்து அவ்வழியே வந்தார் அவனைக் கண்டார். தானே உள்ளே இறங்கிச் சென்று அவனைச் சுமந்து கொண்டு மேலே வந்தார். யார் இந்த இயேசு? எனும் நூலினை எழுதிய அருள் திரு பவுல் லியோன் அடிகளார் இயேசு ஆண்டவர் தனது பணிவாழ்விலே சில முக்கியமான அடிப்படையான முடிவுகளை எடுத்தார் எனக் குறிப்பிடுகின்றார். அவ் முடிவுகளுள் ஒன்றுதான் ஏழைகள், பாவிகள், பிணியாளர் போன்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அக்கறை காட்டி தவறிப்போன ஆடுகளைத் தேடிச்சென்ற நிகழ்வாகும். அவ்வாறு தேடிச்சென்றவர் அவர்களின் அடிமைநிலையினின்று அவர்களை விடுவிக்க தன்னையே பரிகாரப் பலியாக ஒப்புக்கொடுக்கின்றார். இதனால் நாம் அனைவரும் மீட்படைய அவர் காரணமாகினார்.

## யாரை அவர் தேடிவந்தார்?

வரலாற்றிலே அன்றும் சரி இன்றும் சரி இறைவனின் பார்வை ஏழைகள், நோயுற்றவர்கள், சிறுமைப்படுத்தப்படுபவர்கள், அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்படுபவர்கள், தீண்டத்தகாதோர் எனப்படுபவர்கள், ஊனமுற்றவர்கள் இவர்களின் பக்கம்தான் திரும்புகின்றது. ஏனெனில் இவர்கள் ஆதாரமற்றவர்கள் இறைவன் ஒருவரே கதி என்று முழுமையாக அவரது தயவின் கருணையினை நம்பியே வாழும் அனாவீம்கள். எனவேதான் இவர்களின் கூக்குரலுக்கு இறைவன் செவிசாய்க்க ஒருபோதும் பின் தங்குவதில்லை. அதுமட்டுமன்றி இவர்களுடன் தன்னையே அடையாளப்படுத்தும் மாட்சிமை பொருந்தியவர் இவர்கள் சார்பிலே நீதி கேட்கவும் தயங்குவதில்லை. எனவேதான் பழைய ஏற்பாட்டுக் காலங்களிலே இஸ்ரயேல் மக்களை நோக்கி, "எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு? அருவருப்பான உங்கள் தூபங்கள் எதற்கு?" (எசா 1:11,13) என அவர்களை கடுமையாகச் சாடி "நன்மையினைச் செய்யவும் நீதியினை நாடவும், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யவும், திக்கற்றவருக்கு நீதி வழங்குமாறும் பணிக்கின்றார்" (எசா 1:17). இவர்கள் மீது அன்பு செலுத்துவது எரிபலிகளையும் வேறு பலிகளையும் விட மேலானது (மத். 12:33) என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

> இவர்கள் ஆதாரமற்றவர்கள் இறைவன் ஒருவரே கதி என்று முழுமையாக அவரது தயவின் கருணையினை நம்பியே வாழும் அனாவீம்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இஸ்ரயேல் மக்களிடையே "ஏழைகள்" எனப்பட்டோர் தனியே பொருளாதாரத்தில் மட்டும் வறியவர்கள் என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கவில்லை. நோய், உடல் ஊனத்தினால் பாதிக்கப்பட்டு வேலைசெய்து பிழைக்க இயலாமல் பிச்சை எடுத்து வாழ்ந்தவர்களும், அனைவராலும் ஒடுக்கப்பட்டு, தீண்டத்தகாதவர்கள் கீழ்சாதியினர் என முத்திரை குத்தப்பட்டு யாருடைய உதவியும் கிடைக்காமல் இறைவனே கதி என்று வாழ்ந்தவர்களும், மற்றும் கைம்பெண்கள்; அநாதைகள் போன்றோரும் ஏழைகளாகவே கணிக்கப்பட்டனர். பசி தாகத்தால் இவர்கள் துன்புற்றாலும் இவர்கள் அனுபவித்த கொடிய துன்பம் பிறருடைய புறக்கணிப்பால் அவர்களுக்கு ஏற்பட்ட 'வெட்கமும், இழிநிலையும்' தான். இத்தகையோர்க்கு மதிப்பும் இல்லை, மரியாதையும் இல்லை. இவர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படவில்லை. இவர்களுக்கு மனிதமாண்பு மறுக்கப்பட்டது.

இதே வேளையில் கடவுளின் இரக்கத்தையே மட்டும் நம்பி வாழ்வோரையும் குறிக்க "ஏழைகள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இவர்கள் உள்ளத்தால் ஏழைகள், எளிய மனத்தோர், ஏழையரின் உள்ளத்தோர், என நற்செய்தியாளர்களால் குறித்துக் காட்டப்படுகின்றார்கள் (மத். 5:3)

சமூகத்தினாலே புறக்கணிக்கப்பட்டவர்களில் அடுத்த நிலையினர் பாவிகள் ஆவர். ஏழைகள் என்ற விரிந்த வகுப்பினிலே இவர்களும் உள்ளடக்கப்பட்டாலும் ஏழைகளைவிட இவர்களே வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டதுமின்றி சமூகத்தில் வெறுத்தும் ஒதுக்கப்பட்டனர். தூய்மையற்ற தொழிலாளிகளான விபச்சாரிகள், வரிதண்டுவோர், திருடர்கள், மந்தைமேய்க்கும் கூலியாட்கள், வட்டிக்குக் கடன் கொடுப்போர், சூதாட்டக்காரர்கள் போன்றோரும் பாவிகள் வரிசையிலே எண்ணப்பட்டனர். இவர்களைத்தவிர இறைவனின் கட்டளைகளை அனுசரியாதோர், தூய்மைச் சடங்குகளைக் கடைப்பிடிக்காதோர், பாவச் செயல்களிலே ஈடுபடுவோர் என பலரும் இவ் வகுப்பினிலே உள்வாங்கப்பட்டனர். பாவிகள் எனக் குறிப்பிடும்போது இருவிடயங்களை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொள்வது மிகவும் பொருத்தமானது. ஒன்று அனைத்துப் பாவங்களும் வெளிப்படையானவையல்ல. எனவே கனமான பல பாவங்களுக்குக் காரணகர்த்தாக்களாகஇருக்கும் 'பெரியோர்கள்' தமது வலிமையான சக்திகளால் இயல்பாகவே தமது பாவங்களை மறைத்து சான்றுகளை அழித்து கௌரவமாக உலாவருவதும், சூழ்நிலைகளின் உந்துதல்களினாலே விரும்பியோ விரும்பாமலோ பாவத்திலே விழும் ஏழைகள் அப்பாவத்தின் பெயரினாலேயே மேலும் நசுக்கப்படுதல் ஒரு சமூகத்திலே இயல்பாகவே நடக்கும் நிகழ்வுகளாகும். மற்றையது அன்றைய யூத சமூகத்திலே கல்வியறிவிற்கும், ஒழுக்கத்துக்குமிடையே ஆழமான தொடர்பு இருப்பதாக எண்ணப்பட்டது. ஏனெனில் கல்வியறிவு உடையோரே மறைநூலினை வாசித்து ஆராயமுடியும். மறைநூலிலே இறைவாக்கினர்கள், சட்டம் என இரு பெரும் பிரிவுகள் இருந்தன. எனவே சட்டத்தையும் அதற்கு இறைவாக்கினரின் விளக்கங்களையும் அறிதலே கல்வியறிவு என்று பொருளாயிற்று. எனவே படிக்கத்தெரியாதவர்கள் அனைவரும் சட்டத்தையும் ஒழுக்கத்தையும் தெரியாதவர்களாக அவற்றைக் கடைப்பிடிக்காதவர்களாக கருதப்பட்டனர்.

> சூழ்நிலைகளின் உந்துதல்களினாலே விரும்பியோ விரும்பாமலோ பாவத்திலே விழும் ஏழைகள் அப்பாவத்தின் பெயரினாலேயே மேலும் நசுக்கப்படுதல் ஒரு சமூகத்திலே இயல்பாகவே நடக்கும் நிகழ்வுகளாகும்.

எனவே இயேசுவின் காலத்திலே பாவம் மனிதனை அடிமையாக்கும் என்ற உண்மை நெறி உணரப்படாமல் பாவி எனும் முத்திரையினைக் குத்தி அவனைப் புறக்கணிக்கும் நிகழ்வே முனைப்பு பெற்றிருந்ததை நாம் அவதானிக்கமுடியும். எனவே எந்தக் கோணத்திலே இருந்து பார்த்தாலும் பாவிகளின் நிலை பரிதாபமானதாகும். சட்டபூர்வமாக அவர்கள் தூய்மை நிலையினை அடையலாம். ஆனால் அதற்கு தேவையான பரிகாரப் பணமானது தூயதாக இருக்க வேண்டும். எனவே இவ்வாறான நடைமுறைகளால் பாவிகள் எனக் கருதப்பட்டோர் விரக்தி அடைந்தவர்களாக காணப்பட்டனர். அவர்கள் குற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வோடு மட்டுமன்றி பயத்துடனும் கவலையுடனுமே வாழ வேண்டியதாயிற்று.

அன்றைய சமூகத்திலே பின்தள்ளப்பட்டவர்கள் என்ற வரிசையிலே அடுத்து இடம்பிடிப்பவர்கள் நோயாளிகளாவர். யூத மக்களின் நம்பிக்கையின்படி உடலானது ஆவியானவர் உறையும் இல்லமாகும். அசுத்த ஆவி அவனை ஆட்கொள்ளுகின்றபோது அவனுக்குள்ளே நோய்கள் தலைதூக்குகின்றன என்பது அவர்களின் கருத்து எனவே நோய்களுக்கும் தீயஆவிகளுக்கும் தொடர்பு உண்டென அவர்கள் நம்பினர். எனவே எல்லா இடர்களும், நோய்களும், ஒழுங்கீனங்களும் 'தீமை' எனக் கருதப்பட்டன. பாவங்களுக்குத் தண்டனையாக கடவுளால் அனுப்பப்பட்ட வேதனைகள் அவை என நம்பினர். இந்த நோய்கள் ஒருவரின் பாவத்தினால் மட்டுமன்று அவனைச் சார்ந்தவர்களின் பாவ சாபங்களினால் கூட ஏற்படக்கூடியது என உறுதியாக யூதர் நம்பினர். அதே வேளையில் நோயினாலே வேதனைப்பட்டவர்கள் யாவராலும் கைவிடப்பட்ட நிலையிலே மந்திரவாதிகளை நாடிச்சென்றனர். இதனால் மூட நம்பிக்கைகளின் தாக்கம் அவர்களிடையே வேரூன்றிக் காணப்பட்டது. இவ்வாறாக நோயின் கொடுமை ஒருபுறம் அதைவிட கொடிய மனிதர்களின் அச்சுறுத்தல்கள் ஒருபுறம் என மறுபுறம் இவர்கள் ஆலைவாய் கரும்பு போலாயினர்.

## இன்றும் எம் சமூகத்திலே .....

போர் தனது கொடிய முகத்தினை மீண்டும் கொடூரமாக காட்டத்தொடங்கிய எம் சமூகத்திலும் பின்தள்ளப்படுபவர்கள் தொகை கணிசமானதே "தகுதிகாண்பதே தப்பிப்பிழைக்கும்" (Survival of the Fit-test) என்ற கூற்றினைப் போலவே சடுதியான விலையேற்றங்களையும், தொழிலில்லாப் பிரச்சினைகளையும்,

> **"தகுதிகாண்பதே தப்பிப்பிழைக்கும்" (Survival of the Fittest) என்ற கூற்றினைப் போலவே சடுதியான விலையேற்றங்களையும், தொழிலில்லாப் பிரச்சினைகளையும், சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளையும் நேராக முகம் கொடுக்கத் தேவையான வளங்கள் இல்லாத பெரும்பான்மையினர் "ஏழைகள்" என்ற வகுப்பினுள்ளே பெருமளவாக சேர்க்கப்படுகின்றனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளையும் நேராக முகம் கொடுக்கத் தேவையான வளங்கள் இல்லாத பெரும்பான்மையினர் "ஏழைகள்" என்ற வகுப்பினுள்ளே பெருமளவாக சேர்க்கப்படுகின்றனர்.

வெளிநாட்டு உதவிகளையும், உயர் பதவிகளையும், இன்னும் வியாபார தொழில்களிலும் ஈடுபடுபவர்களைத் தவிர மற்றவர்களின் பொருளாதார நிலை மிகவும் கேள்விக்குரியதே. கடல் வலய தடைச்சட்டத்தினால் பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் ஒருவேளை உணவுடன் வாழ்வது அனைவரும் அறிந்ததே. தருணம் மாறுகின்ற காலநிலையினாலும், விவசாய மூலங்களின் தட்டுப்பாடுகளினாலும், வங்கியில் தொழிலின் நிமித்தம் பெற்றகடனையே மீளச் செலுத்தமுடியாமல் அவதியுறுகின்ற விவசாயக் குடும்பங்களின் நிலை இக்கட்டானதாக உள்ளது.

இவற்றைத் தவிர தினந்தோறும் அரங்கேற்றப்படுகின்ற கொலை, கடத்தல்களினால், தமது உடன்பிறப்புக்களையும், பிள்ளைகளையும், கணவன்மார்களையும் இழந்து சோகத்திலே இருந்தும், பொருளாதார வறுமையிலே இருந்தும் மன அழுத்தங்களில் இருந்தும் விடுபடமுடியாமல் வேதனயின் சிறைக்குள்ளே தினமும் வாழும் உறவுகள்தான் எமது சமூகத்திலே எத்தனை எத்தனை.

இவற்றைத்தவிர தமிழர்களின் சாதிய அமைப்பு முறையினாலும், சமூக வேறுபாடுகளினாலும் பின்தள்ளப்படுபவர்கள் இன்றும் எம் சமூகத்திலே காணப்படுகின்றனர். தீண்டத்தகாதவர்கள் என்ற போர்வையிலே அவர்களைக் கீழே நோக்கும் உயர் குடியினரும் அவர்களைக் கரும்பாகப் பிழியும் முதலாளிகளும் இன்றைய போர்ச்சூழலின் பின்புலத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். போர், பசி, பிணி என அனைத்து வகையான அடக்கு முறையாலும், ஆதிக்க அழிவுச் சக்தியினாலும் பின்தள்ளப்படும் இவர்கள் இறைவன் ஒருவரே நமக்குத் துணை என்ற அச்சாரத்திலே சுழலமுயல்வது இயல்பானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு ஆண்டவர் தனது பணிவாழ்வின் பிறப்பிலிருந்து சிலுவையிலே மனுக்குலத்துக்காக மரிக்கும் தருணம் வரைக்கும் ஏழைகளுடனும், தாழ்த்தப்பட்டோருடனும், ஆதரவில்லாதவர்களுடனுமே தன்னை அடையாளப்படுத்தினார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவர்களின் மீது அவருக்கு தனிப்பட்ட பரிவு இருந்தது. அவர்களின் துயரங்களிலே அவர் பங்குகொண்டார். அவர்களின் மகிழ்விலும் அவர் இரண்டறக்கலந்தார். அவர்களை ஒடுக்கியவர்களை மனம் மாற்றினார். தம்மை உயர்த்தியவர்கள் அனைவர் முன்பாகவும் நாணும்படி அவர் செய்தார். இவர்கள் கூடவே இயேசுவும் நடந்து சென்றமையினை நற்செய்தி ஏடுகள் முழுவதும் நமக்கு படம் பிடித்துக்காட்டுகின்றன. அவர்கள் மேல் அவர் கொண்ட பரிவு (மத். 14:14) (மத். 9:36, மாற். 6:34), அன்பு (லூக். 7:13), இரக்கம் (மாற்.1:41), கரிசனை (லூக். 10:41, மாற். 5:36, மாற். 6:50), கவனம் (மாற். 12:41-44) என்பவைதான் பிறரிடம் இருந்து இயேசுவை வேறுபடுத்திக் காட்டிய சிறப்பு எனலாம்.

அவரின் உவமைகள் கூட அவர் இத்தகையோர்க்குக் காட்டிய பரிவினை வெளிப்படுத்தி நின்றன. நல்ல சமாரியன் உவமை (லூக். 10:3), காணாமல் போன மகன் உவமை (லூக்கா 15:20) போன்றவற்றைச் சிறந்த எடுத்துக்காட்டுகள் என எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுது சிரித்து, மகிழ்ந்து, உல்லாசமாகப் பொழுது போக்கிறவர்களே உங்களுக்கு ஐயோ கேடு என முழங்கிய இயேசு அழுவோரையும், நாதியற்றவர்களையும் பார்த்து உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் என்ற நம்பிக்கையினைக் கொடுத்தார் (லூக் 6:20-26). மேலும் துயரப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என அவர்களுக்கு ஆறுதல் கூறினார் (மத்.11:28-30). எனவேதான் அவர் செல்லுமிடமெல்லாம் ஏழைகளும், உடல் நலமற்றவர்களும், ஆதரவற்றவர்களும், பாவிகளும் அவரைப் பின் தொடர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் அவர் அதே பரிவுடனும், மனதுருக்கத்துடனும் வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களைக் கண்ணோக்குகின்றார். நயீன் நகரக் கைம்பெண்ணின் துயரக்கண்ணீரைக் கண்டு மனதுருகிய அதே ஆண்டவர் இன்றும் எம் பிரதேசங்களிலே சுட்டுக் கொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக், கொலை செய்யப்பட்ட, சித்திரவதைக்குள்ளாகி சுயநிலை இழந்த, காணாமல்ப்போன சகோதர உறவுகளின் கண்ணீரை மனதுருக்கத்தோடு காண்கின்றார். ஒரு நேர உணவினை உண்டு பிள்ளைகளின் தேவைகளை சிறிதளவேனும் ஈடு செய்யமுடியாமல் இறைவனையே நம்பியிருக்கும் எல்லாருடனும் கூடவே அவர் நடக்கின்றார்.

நயீன் நகரக் கைம்பெண்ணின் துயரக்கண்ணீரைக் கண்டு மனதுருகிய அதே ஆண்டவர் இன்றும் எம்பிரதேசங்களிலே சுட்டுக் கொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக், கொலை செய்யப்பட்ட, சித்திரவதைக்குள்ளாகி சுயநிலை இழந்த, காணாமல்ப்போன சகோதர உறவுகளின் கண்ணீரை மனதுருக்கத்தோடு காண்கின்றார்.

புறக்கணிக்கப்பட்ட மக்களுடையே வேதனையும் துயரும் இயேசுவை இத்துணை ஆழமாகத் தொட்டன. தொடுகின்றன. எதிர்காலத்திலே ஏற்படக்கூடுமான பேரிடரும் அழிவும் அவரது உள்ளத்தை அதிகமாகவே கலங்கச் செய்திருக்கும். பரிவும், இரக்கமும் உள்ளத்தில் எழுவது பிறருக்கு ஏற்படும் துன்பத்தை துடைக்க வேண்டும் என்ற கரிசனையின் காரணமாகத்தான். இயேசுவின் இதயம் பிறரது துன்பத்தைக் கண்டு இளகிய இதயம் என்றால், விரைவில் நிகழப்போகிற பேரழிவு, எண்ணிறைந்த மக்களின் அழிவிற்கு வழிகோலப் போகின்றது என்ற உணர்வு அவருக்கு ஆழ்ந்த கவலையினை அளித்தது. யோவானோ திருமுழுக்கு பெற்று மனமாற்றம் அடைய மக்களை அழைத்தார். இயேசுவோ அனைத்துத் தீமைகளிலிருந்தும் மக்களை விடுவிக்க திட்டம் வகுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளைகளை அறுத்த விடுதலை

இயேசு அடிமைத்தளைகளிலே இருந்து மனிதனை விடுவிக்க சில படிமுறைகளைக் கையாண்டார். அவற்றில் முதலாவது தான் நம்பிக்கை ஆகும். 'கடவுளால் எல்லாம் முடியும்' (மாற். 10:27) என்பதில் கிறிஸ்து சிறிதேனும் ஐயப்படவே இல்லை. நம்பிக்கையும் விசுவாசமும் உடைய மனிதன் கடவுளைப் போன்று வல்லமையுடையவனாக மாறுகிறான் என்பது இயேசுவின் கருத்து. நம்புகிறவனுக்கு எல்லாம் இயலும் (மாற். 9:23) என்று கூறிய இயேசு கடுகு போன்ற சிறிய விசுவாசம் கூட மலைபோன்ற பெரிய காரியங்களை சாதித்துவிடும் எனக் கூறினார். விசுவாசம் என்பது உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்புகின்ற ஓர் உறுதிப்பாட்டினைச் சுட்டி நிற்கின்றது.

> நம்பிக்கையும் விசுவாசமும் உடைய மனிதன் கடவுளைப் போன்று வல்லமையுடையவனாக மாறுகிறான்

தீமையை நன்மையால் முறியடிக்க இயலும், தீமையை நன்மை முறியடிக்கும் என்பதே உண்மை. எனவே, ஒரு காரியம் நன்மையாகவே இருக்கும் போதே அது நிகழமுடியும், ஏன் நிச்சயமாக நிகழும் என்று உறுதியாக நம்புவதே விசுவாசம், அதுவே நம்பிக்கை. இதை வேறு விதமாக சொல்லப்போனால், கடவுள் மனித இனத்திற்கு நன்மையே செய்வார், கடவுளால் எல்லாத் தீமைகளையும் வெல்ல இயலும். கடவுள் நிச்சயமாக எல்லாத் தீமைகளையும் முறியடிப்பார் என்று உறுதியாக நம்புவது விசுவாசம், அதுவே நம்பிக்கை. எனவே எந் நிகழ்வானாலும் சரி 'இது என் விதி', 'இது என் தலைவிதி' என்று கருதும் மனப்பான்மை விசுவாசத்திற்கு எதிரான செயலாகும். இவ்வாறும், இதே பொருள்படவும் கூறுவோர் எம்மில் பலருண்டு. இத்தகைய மனநிலையுடையோர் கடவுளின் வல்லமையில் நம்பிக்கை அற்றவர்கள். எனவே இவர்கள் இறைவனின் வல்லமையினை அனுபவிக்க தம்மையே நாம் தகுதியற்றவர் ஆக்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் இரு அம்சங்கள்தான் விசுவாசமும் நம்பிக்கையும் ஆகும். அதுபோலவே விசுவாசம் என்ற கொள்கையின் இரு அம்சங்கள் அவவிசுவாசமும், அவநம்பிக்கையும் ஆகும். எனவேதான் அவநம்பிக்கையையும் விதிவசக் கொள்கையினையும் முறியடிக்கும் விதமாக கருத்து அமைந்ததுதான் இயேசுவின் அரும் அருளடையாளங்கள். எங்கெல்லாம் விதிவசக் கொள்கை (Fatalism) மறைந்து விசுவாச சூழமைவு உருவாகியதோ, அங்கு அதிசயமான காரியங்கள் நிகழத் தொடங்கின. நீண்ட போதனைகளை விட சமயக், கருத்துக்களைவிட இயேசு புரிந்த வியத்தகு செயல்கள் சாதாரண மக்களின் இதயத்தை ஆழமாகத் தொட்டன. மக்களுக்குக் குணம் அளித்ததன் ஒரே நோக்கம் அவர்கள் மேல் அவர் கொண்ட பரிவும், இரக்கமும் தான் என்பதை நாம் மறந்து போகக்கூடாது. அத்தோடு இரக்கம் கொள்ளுதலும், நம்பிக்கையோடு செயல்ப்படுவதும் அதிசயமாக குணமளித்தலும் தம்மாலே மட்டுமே முடியும் என இயேசு நினைக்கவில்லை. எனவே இறைவனில் கொள்ளுகின்ற ஆழமான விசுவாசமும் நம்பிக்கையும் மனிதனுக்கு விடுதலையினை மட்டுமன்றி மன்னிப்பின் நிச்சயத்துடனான புது வாழ்வினையும் அவனுக்கு வழங்கிநின்றது. அவ் விடுதலையே இறையரசின் நுழைவாயிலாக இருக்கின்றது. இறையரசில் அவன் சுதந்திரமாய் இறைவனை அன்பு செய்ய இவ் விடுதலை வழி கோலியது.

> உள்ளத்தில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டின் இரு அம்சங்கள் தான் விசுவாசமும் நம்பிக்கையும் ஆகும்.

## முடிவுரை

'நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது'. (1யோவா. 4:9). இறைவனின் அன்பின் வெளிப்பாடாக இவ்வுலகிற்கு வந்த இறைமகனோ 'நான் என் உயிரை ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன்' என்று கூறி (யோவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10:15-16) அன்பின் நிறைவினிலே தன் உயிரை முதலாகக் கொடுத்தார். 'அவருடைய காயங்களினால் நாம் விடுதலை அடைந்தோம்' (எசா. 53) ஆனால் இன்றும் எம் சமூகத்திலே அடிமைத்தனத்தினுள்ளே எத்தனையோர்பேர் வாழ்கின்றனர். சமூக, பொருளாதார, அரசியல் அடிமைத்தனத்தினுள்ளே எத்தனையோர் பேர் வாழ்கின்றனர். சமூக, பொருளாதார அரசியல் அடிமைத்தனங்களைப் பார்க்கிலும் பாவ அடிமைத்தனத்திலே வாழ்பவர்களின் பரிதாபநிலை குறித்து கிறிஸ்து நன்கு அறிந்திருந்தார்.

கிறிஸ்தவன் என்பவன் ஒருபோதும் அடிமைத்தனத்திலே வாழ்பவன் அல்ல, ஏனெனில் அவன் கிறிஸ்துவாலே வென்றெடுக்கப்பட்ட அருள் வாழ்வுக்கு உரித்துடையவனாக இருக்கின்றான். கடவுள் ஒருவரைத்தவிர எதற்கும் அவன்மேல் அதிகாரமில்லை. அனைத்து படைப்புகளுக்கும் அரசாளும் அதிகாரத்தை அவன் கடவுளிடம் இருந்து பெற்றுள்ளான். இவ் உரிமைவாழ்வின் சிறப்புக்களுடன் மட்டும் அவன் நிறைவு காணமுடியாது. கிறிஸ்துவோடு இணைந்து அனைத்து படைப்புக்களையும் பாவ, சாப அடிமைத்தனங்களில் இருந்து விடுவித்து கிறிஸ்துவின் அரசில் தந்தையின் ஆட்சியின் கீழ் அனைத்தையும் ஒன்றிணைக்க அவன் கடமைப்பட்டுள்ளான். எனவே இயேசுவின் மீட்புப்பணியில் நாமும் ஒன்றிணைவோம். தளைகளைத் தகர்த்தெறிந்து புதுவாழ்வை சுதந்தரிப்போம்.

## உசாத்துணை நூல்கள்

*அருட்திரு. பவுல் லியோன் யார் இந்த இயேசு?, திண்டுக்கல், வைகறைப பதிப்பகம், 1995.*

*திருவிவிலியம். திண்டிவனம், டிவைன் பிரின்டர்ஸ், 2000.*

*கிறிஸ்தியல் விரிவுரைப் பாடக்குறிப்புகள் - அருள்திரு. றெஜீஸ் இராஜநாயகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு பற்றிய முன்னறிவிப்பு

அருட்சகோ. கீ. லக்ஸ்மன்

இயேசு பல நூற்றாண்டுகளாக முன்னறிவிக்கப்பட்ட மெசியா. காலம் நிறைவுற்றபோது அவரது புனிதமாக்கும் பணி தொடங்குகின்றது. ஆனால் அந்தப் பணியின் சிறப்பையும், முழுமையையும் காட்ட ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்ட பாணியில் ஒரு முன்னோடி தேவைப்பட்டார். எனவேதான் திருமுழுக்கு யோவானை இயேசுவின் பிறப்புக்கும், பணிவாழ்வுக்கும், இறப்புக்கும் முன்னோடியாக நற்செய்தியாளர்கள் காட்டுகின்றார்கள்.

திருமுழுக்கு யோவான் இயேசுவினுடைய தாய்வழி உறவினர். இயேசுவினுடைய பிறப்புக்கு சிலமாதங்களுக்கு முன்னர் சக்கரியாவுக்கும், எலிசபேத்திற்கும் பிறந்தவர். இயேசுவினுடைய புனிதப்பணியில் பங்குபெற மக்களைத் தயார்ப்படுத்தும் பணியைத்தான் ஒரு தபசியாக வாழ்ந்தும், தன்னுடைய போதனையாலும், செயல்களினாலும், மக்களுடைய அக்கால நடைமுறை வாழ்க்கை முறைக்கு பெரும் சவாலாக இருந்தும் புதியதொரு உயிரூட்டமுள்ள நீரோட்டத்திற்கு அர்த்தம் பிறக்கும் வாழ்வுக்கு மக்களை அழைத்தும் அவர்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தி உணர்வுகளை உயிர்பெறச் செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த யதார்த்தத்தையும் அறிவதற்கு சாதகமான அணுகுமுறை தேவையாகும். வரலாறு என்பது கடந்தகால உண்மைகளைக் கண்டறிவதேயாகும். எந்தவொரு வரலாற்று உண்மைகளையும், நிகழ்கால சாதகமான நிலைப்பாடுகளின்றி முழுமையாக அடைய முடியாது. இந்த வகையில்தான் திருமுழுக்கு யோவான் அக்கால சமுதாய, சமய கலாச்சார வரம்புகளைக் கடந்து காவிய நாயகனாகின்றார்.

இன்றைய உலகச் சூழமைவு ஒரு அடிப்படை யதார்த்தமாக காணப்படுகின்றது. இவை மனித குலத்தையே வேரோடு பிடுங்கி எறியும் நிலையாகக் காணப்படுகின்றது. இவைகளில் முக்கியமானது போர் என்றால் மிகையாகாது. இவற்றின் காரணமாக இன்று உலகம் ஆபத்துக்குள்ளாகிவிட்டது. இது வெறுமனே நிகழ்கால யதார்த்தம் மாத்திரம் அல்ல. அன்று திருமுழுக்கு யோவானை, அவரினுடைய பணியை விகாரப்படுத்தியவை வேறொன்றுமில்லை இந்த மனிதப் போக்கிலான சிந்தனைப் பரிமாணங்கள்தான். இன்றைய எமது வரையறைகள்தான் திருமுழுக்கு யோவான் அன்றைய யதார்த்தங்களாக சந்தித்த சீர்கேடுகளின் பின்புலங்கள்.

> இன்றைய எமது வரையறைகள்தான் திருமுழுக்கு யோவான் அன்றைய யதார்த்தங்களாக சந்தித்த சீர்கேடுகளின் பின்புலங்கள்.

ஒவ்வொரு சமுகத்திற்கும் திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளும் செயல்களும் உடலிலே தைத்த அம்பு முனைகளாகின்றன. குறிப்பாக ஆட்சி செய்தவர்கள், படைவீரர்கள் கட்சிகளையுடையோர் ஏன் சாதாரண மக்களுக்குக் கூட திருமுழுக்கு யோவானின் வார்த்தைகள் சவுக்கடிகளாக அமைந்தன. ஆனால் அவரது வார்த்தைகள் பலருக்கு சாவு மணிகளாகக் கூட இருந்தன. இவ்வாறுதான் யோவான் இயேசுவின் புனிதமாக்கும் பணியை அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்கள் மத்தியிலே முன்னெடுத்துச் செல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் சாவுமணிக்கான எச்சரிக்கையாக "விரியன் பாம்புக் குட்டிகளே..." என்று வீரமுழக்கமிட்டு மனம்மாற்றத்திற்கான அறைகூவல் விடுக்கின்றார். அதன் விளைவாக திருமுழுக்கு வழங்கி அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மெசியாவின் வழியைச் செம்மையாக்கிப் புனிதப்படுத்துகின்றார்.

## இயேசு எடுத்த முதல் முடிவு திருமுழுக்கு பெறல்.

இயேசு வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் பல கொள்கைகள் நிலவிய போதும் அவை ஒன்றும் அவரைக் கவர்ந்து இழுக்கவில்லை. மாறாக திருமுழுக்கு யோவானோடு மட்டுமே தம்மை இணைத்துக் கொண்டார். ஏனெனில் யோவான் தம்முடைய சமகால மனிதரிடமிருந்து வேறுபட்டவராக வாழ்ந்தபோது இயேசு திருமுழுக்கு யோவானின் கையால் திருமுழுக்குப் பெற எடுத்த முடிவு அவருடைய நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது. இயேசுவின் காலத்தில் நிலவிய வெவ்வேறு அரசியல், சமய, சமூக, நிலைகளின் புரையோட்டமே இயேசு எடுத்த இந்த முடிவிற்கான முதன்மைக் காரணமாகும். இந்த முடிவுதான் இயேசுவின் வாழ்வின் பணியின் வேராகவும், அவரது சிலுவைப் பலியின் உச்ச நிலையாகவும் இருந்தது என்று கூறலாம். எனவே மீட்புப் பணியிலே திருமுழுக்கு யோவான் முதன்மைப் பங்காளி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

> ஏனெனில் யோவான் தம்முடைய சமகால மனிதரிடமிருந்து வேறுபட்டவராக வாழ்ந்தபோது இயேசு திருமுழுக்கு யோவானின் கையால் திருமுழுக்குப் பெற எடுத்த முடிவு அவருடைய நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது.

## திருமுழுக்கு யோவானும் இயேசுவும்

அன்றைய சமுதாயத்தில் இயேசுவின் வாழ்வில் பலவிதமான நபர்கள் தாக்கங்களை ஏற்படுத்தினார்கள். இவர்களுள் திருமுழுக்கு யோவான் முக்கியமான நபராகக் காணப்படுகின்றார். யோவானிடம் இயேசு திருமுழுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது முதல் இயேசு தனது பணியை ஆரம்பிக்கின்றார். இப்பணியின் உச்ச நிலைதான் அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றிற்கு அடித்தளமிட்டன. எனவேதான் திருமுழுக்கு யோவான் இயேசுவின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி முதன்மையானவராக முன்னிலைப்படுத்தப்படுகின்றார். ஆகவேதான் திருமுழுக்கு யோவான் இறைவாக்கினர்களுள் பெரும் இறைவாக்கினராகக் கருதப்பட்டு போற்றப்படுகின்றார்.

எனவேதான் திருமுழுக்கு யோவான் இயேசுவின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி முதன்மையானவராக முன்னிலைப்படுத்தப்படுகின்றார்.


உங்களது இறையியல் தொடர்பான அனைத்து வினாக்களுக்கும் தெளிவான பதில்களை வழங்க நாம் தயாராக உள்ளோம்

**உங்கள் வினாக்களை அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்

இறையியல் கோலங்கள் (வினாக்கள்)

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி.

கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.


**எம் இனிய இறையியல் கோல வாசகர்களே!**

கடந்த ஆண்டிற்கான கட்டணம் செலுத்தாதவர்கள் தயவுசெய்து உங்கள் பதிவெண்ணுடன் கட்டணத்தை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் எமது இறையியல் கோல வளர்ச்சிக்கு எதிர்பார்த்து நிற்கிறோம்.

நன்றி

நிர்வாகக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையாட்சி பற்றிய இயேசுவின் போதனை

அருட்சகோதரி விக்ரறின் செல்வதி மலக்கியாஸ் திரு.

## முகவுரை

இறையாட்சி என்பது விடுதலை நிறைந்த ஆட்சி ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் விடுதலை வழங்குவதே இவ்வாட்சியின் நோக்கம். இவ்வாட்சியை இவ்வுலகில் நிலைநாட்டுவதே இயேசுவின் பணியாகவும் அமைந்தது. இதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். "காலம் நிறைவேறி விட்டது; கடவுள் அரசு நெருங்கி விட்டது" (மாற் 1:15) என்று கூறி இறையாட்சியில் பங்குபெற எம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார் இயேசு பெருமான். இயேசு கொணர்ந்த இறையரசைப் பரப்ப நாமும் முனைந்து செல்வோம். இறையாட்சியின் மக்களாக நாம் என்றும் வாழ முனைந்திடுவோம்.

இறையாட்சிக்கு எதிராக இருப்பதென்பது இறைவனின் விருப்பத்தை முற்றாக புறக்கணிப்பதாகும். மனிதனின் செயற்பாடுகளை அவர்களின் உள்ளங்களில் முழுமையடையச் செய்வதே இறைவனின் விருப்பமாகும். இறையாட்சிக்கு சான்று பகர்ந்த கிறிஸ்துவின் வாழ்வு இறைதந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருந்தது. கிறிஸ்து இறை தந்தையுடன் கொண்ட உறவின் வழியாக அவர் விருப்பத்தை நிறைவேற்றினார். மக்களை இறைவார்த்தையினால் ஊட்டம் பெறச் செய்தார். செபிப்பதும், செபத்தில் நிலைத்திருப்பதும் இறையாட்சியை வெளிப்படுத்துவதும் நம் ஆண்டவர் கிறிஸ்துவுக்கு ஒன்றாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்கு விடுதலை

ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் விடுதலை வழங்குவதே இயேசுவின் பணியாக அமைந்தது (எசா. 35:5-6). "அப்போது குருடருடைய கண்கள் திறக்கப்படும். செவிடர்களின் காதுகள் கேட்கும் ஆற்றல் பெறும். அப்போது முடவன் மான் கன்று போலத் துள்ளுவான். ஊமைகளின் நாக்கு மகிழ்ச்சியால் பாடும்" (எசா. 35:5-6).

> ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டோருக்கும் விடுதலை வழங்குவதே இயேசுவின் பணியாக அமைந்தது

இவ்வாறாக வெவ்வேறு வகைகளில், விதங்களில் ஏழைகளாக ஒடுக்கப்பட்டோராக இருப்போருக்கும் இறைவன் விடுதலை கொடுப்பதே இறையாட்சியின் முதல் நோக்கமாகும்.

விடுதலை வழங்கும் இயேசு குணமளித்தல், பார்வை பெறச் செய்தல், காது கேட்கச் செய்தல், மகிழ்ச்சி கொணர்தல், கட்டவிழ்த்தல், சுதந்திரம் வழங்கல், நல்ல செய்தி அறிவித்தல், அருள் பொழிதல் போன்ற விடுதலை வழங்கும் செயல்களில் இறையாட்சியை எப்போதும் இவ்வுலகில் நிலைநாட்டி வந்தார். சிறப்பாக ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதன் மூலம் வார்த்தை வழி அவர்களுக்கு விடுதலை வழங்கினார். "இறையாட்சி உங்களுக்கு உரியதே" (லூக். 6:20)

## இறையாட்சியின் இலட்சியம்

சமத்துவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதே இறையாட்சியின் இலட்சியமாக அமைந்தது. ஏழைகள் மட்டிலும், ஒடுக்கப்பட்டோர் மட்டிலும் இயேசு கொண்டிருந்த பரிவும், இரக்கமும்தான் இந்த சமத்துவக் கனவு அவர் உள்ளத்தில் எழக் காரணமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்கார இளைஞரிடம் இயேசு சொத்துக்களையெல்லாம் விற்கும்படி ஏன் கேட்டார்?. சொத்துக்களை விற்று அதனால் வரும் செல்வத்தைக் கொண்டு அவர் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதே இயேசுவின் கோரிக்கையாக அமைந்தது.

இந்த சமத்துவ சமுதாயத்திலே ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை; உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு இல்லை; படித்தவன் படிக்காதவன் என்ற வேறுபாடு இல்லை; யாவரும் அவர் ஆட்சியில் சமமானவர்களே; நாமெல்லோரும் ஒரே குடும்பம்; அமைதியின் குடும்பம் இதுவே இறையாட்சியின் இலட்சியம்.

யாவரும் அவர் ஆட்சியில் சமமானவர்களே நாமெல்லோரும் ஒரே குடும்பம் அமைதியின் குடும்பம் இதுவே இறையாட்சியின் இலட்சியம்.

இயேசு வாழ்ந்த சமூதாயத்தில் செல்வமும் பணமும் உயர்ந்தவைகள் என கருதப்பட்டன. வாழ வசதியற்ற வறியோர் புறக்கணிக்கப்பட்டனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற தத்துவம் அன்றைய சமுதாய அமைப்பிற்கு அடித்தளமாக இருந்தது. சமூதாய அந்தஸ்துக்கு முதலிடம் கொடுத்தனர். அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வுகள் சமூக வாழ்வில் மட்டுமன்றி சமய வாழ்விலும் நிலவியது. இந்நிலையில்தான் இயேசு சமத்துவ சமூதாயத்தை கட்டியெழுப்ப முனைந்தார். இதற்காகவே தன் வாழ்நாளை முடிவுவரையும் கையளித்தார்.

## இறையாட்சியில் யார் இடம் பெறுவார்?

இறையாட்சியில் எல்லோருக்கும் இடமுண்டு. ஆனால் வாழ்க்கை முறையில் மாற்றம் தேவை. அதனால்தான் இயேசு கூறுகின்றார், "நீங்கள் மனந்திரும்பி சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புக மாட்டீர்கள்" (மத். 18:3). இறையாட்சியில் புகவேண்டுமானால் சிறு பிள்ளைகளைப் போல தம்மைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் (மத் 18:4).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனது வாழ்வில் மனமாற்றம் நிகழ்ந்தால் அவன் அனைவரிலும் கடைசியானவனாக அனைவருக்கும் தொண்டனாக தன்னை ஆக்கிக் கொள்வான். ஒருவன் தனது அன்றாட வாழ்வில் பணம் உடமை என்று கவலைப்படாமல் அந்தஸ்து கௌரவம் என்று அல்லலுறாமல் பற்றற்றவனாக வாழ்கின்ற பொழுது இறையாட்சியில் பங்கு கொள்கின்றான்.

மனிதத்திற்கு மதிப்பளித்தார் இயேசு. மனிதம் மலர்ந்திட வேண்டும், மனித மாண்பு உயர்ந்திட வேண்டும் என்று துடித்தார் இயேசு. எனவே தான் ஏழைகளையும் ஒடுக்கப்பட்டோரையும் தனிப்பட்ட விதத்தில் அன்பு செய்தார் இயேசு. அவரது அன்பு யாரையும் ஒதுக்குகின்ற அன்பு அல்ல. ஏழைகளின் ஒரே சொத்து அவர்களது மனிதம்.

> மனிதம் மலர்ந்திட வேண்டும், மனித மாண்பு உயர்ந்திட வேண்டும்

இயேசு அனைவரையும் அன்பு செய்தார். அனைவரும் மனிதர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே அனைவரிலும் கரிசனை காட்டினார். அனைவரும் போலி மதிப்பீடுகளையும், சமூக கௌரவத்தையும் துறந்துவிட்டு உண்மையாகவே மனிதர்களாக மாறிட வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம். இதுவே அவர் விரும்பிய மனமாற்றம். இந்த மனமாற்றம்தான் இயேசுவின் ஆட்சியில் பங்கு கொள்ள தகுதியினை தருகின்றது.

## அனைவரையும் அரவணைப்பது இறையாட்சி

அடுத்திருப்பவனுக்கு அன்பு காட்ட வேண்டும் என்ற கட்டளைக்கு இயேசு முற்றிலும் புதியதொரு பொருள் கொடுத்தார். உலகில் வாழும் அனைத்து மக்களும் நம் அன்புக்கு உரியவரே..... நண்பராயினும் பகைவராயினும் ஒரே இனத்தவராயினும் பிற இனத்தவராயினும் எல்லா மக்களுக்கும் அன்பு காட்ட வேண்டும் என்பது தான் இயேசுவின் போதனையாக இருந்தது. இயேசுவின் ஆட்சியில் பகைவன் என்ற சொல்லுக்கே இடமில்லை. பகைவனும் ஒருவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவனாக உறவினராக மாறமுடியும் மாறவேண்டும் என்று தான் இயேசு போதித்தார். அதனால்தான் இயேசு கூறுகின்றார் "உங்களை வெறுப்போருக்கு ஆசி கூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்".

இவ்வாறாக அனைவரையும் இயேசு இறையாட்சியில் பங்கு கொள்ள அழைத்தார். மனிதன் மட்டில் நாம் காட்ட வேண்டிய அன்பைப் பற்றி இயேசு தன் வாழ்வில் காட்டி இருக்கிறார். இறையாட்சியில் உருவாகுவது சாதாரண குடும்ப உணர்வு அன்று. அது மனித நேயம் நிறைந்தது. பரந்த குடும்ப உணர்வு உள்ள இடத்தில் குறுகிய குடும்ப உணர்வுக்கு இடமில்லை.

> இறையாட்சியில் உருவாகுவது சாதாரண குடும்ப உணர்வு அன்று. அது மனித நேயம் நிறைந்தது.

இயேசுவின் பணி அவரின் வாழ்வு முழுவதுமே புதிய மனித நேயத்தை கட்டியெழுப்புவதாக அமைந்திருந்தது. ஆனால் இயேசு அறிவித்த செய்தியும், அவர் புரிந்த செயல்களும் மக்கள் மனதில் வெவ்வேறு எண்ணங்களை எழுப்பியிருந்தன. சிலர் அவரைப் பேய் பிடித்தவராகக் கண்டனர். அவர் நிலை தடுமாறி புத்தி சுயாதீனமற்றவராக ஆகிவிட்டார் என்று கூட எண்ணினர். ஆனால் மரியாவிடம் உடலெடுத்து மனிதனாய்ப் பிறந்த இயேசு மரியாவோடும், பிற உறவினரோடும் தமக்கிருந்த இயற்கை உறவை மனிதர்கள் "குடும்ப உறவாக", "குரு உறவாக" புரிந்து கொள்ளக் கூடாது என்பதில் கவனமாயிருந்தார்.

எல்லா மனிதர் மீதும் அன்பு காட்ட வேண்டும், பகைவரையும் அன்பு செய்ய வேண்டும் என்று கூறிய இயேசு பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் மட்டில் அன்புகாட்ட மறுத்து செயலாற்றியது குற்றமாகக் கருதப்பட்டது. ஆனால் இயேசு பரிசேயரோடு வாதாடினார். அவர்களோடு பல காரியங்கள் குறித்து விவாதித்தார். அவர்களோடு பழகினார். விருந்துண்டார். ஆகவே பரிசேயர்களை அவர் புறக்கணித்தார் என்றோ அவர்களை அந்நியர் என்று ஒதுக்கினார் என்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கூறமுடியாது. நற்செய்தி நூல்களில் பல இடங்களில் இயேசு பரிசேயரோடு உரையாடிய நிகழ்ச்சிகள் விபரிக்கப்படுகின்றன. பரிசேயர்களின் வீட்டில் இயேசு உணவருந்தியதுண்டு அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்த இயேசு பல முறை முயன்றார். பரிசேயரை இயேசு ஒருபோதுமே ஒதுக்கியதில்லை.

ஆனால் இயேசு பல தடவைகள் பரிசேயர்களை கடிந்து கொண்டதன் காரணம் அவர்கள் தம்மை அழித்துக் கொண்டதோடு பிறரையும் அழித்திட முனைந்தார்கள். இயேசு விடுத்த எச்சரிக்கைகளை கேட்காமல் அவர்கள் காதுகள் மந்தமாய்ப் போயின.

இயேசு பரிசேயர் மட்டில் காட்டிய கோபம் அவர்கள் தங்களையும், பிறரையும் அழிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே.

எல்லா மனிதரையும் அன்போடும் நேயத்தோடும் அரவணைத்ததன் காரணமாகத்தான் இயேசு ஏழைகள் பக்கம் சார்ந்து நின்றார். ஒடுக்கப்பட்டோரோடு தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டார். இவர்களுக்கு சொத்து ஒன்றுமில்லை. மனிதம் ஒன்றே இவர்களுக்கு சொத்தாக இருந்தது. இயேசு ஏழைகளுக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் தனிப்பட்ட அன்பு காட்டினார். ஆனால் இயேசுவின் இந்த தனி அன்பு பிற மனிதரை வெறுத்து ஒதுக்கிய அன்பு அல்ல. அவரது அன்புக்கு அடிப்படை மனித நேயம் என்ற பரந்த அன்பு, அனைவரையும் அரவணைக்கும் அன்பு.

## இறையாட்சி ஏழைகளின் கைகளில்

அரசியல் அதிகாரத்தை உள்ளடக்கிய இறையாட்சி இயேசுவின் கருத்துப்படி ஏழைகள் மற்றும் சிறியோர் கைகளில் இருக்கும். நற்செய்தி இதற்கு சான்று பகிர்கின்றது. "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள் ; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே" (லூக். 6:20).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறுமந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம் உங்கள் தந்தை உங்களை தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார் (லூக். 12:32).

இந் நற்செய்திப் பகுதிகள் எமக்கு எவற்றை கூறி நிற்கின்றன? பண பலமும் அதிகார பலமும் கொண்டவர்கள் தாழ் நிலைக்கு தள்ளப்படுவார்கள். ஏழைகள் உயர் நிலைக்கு கொணரப்படுவார்கள்.

லூக்கா நற்செய்தி இதை தெளிவாகக் கூறுகிறது. இறைவன் வலியோரை அரியணையின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகின்றார். பசித்தோரை நலன்களால் நிரப்புகின்றார் (லூக் 1:52-53).

ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர்..... செல்வர்களே ஐயோ உங்களுக்கு கேடு (லூக் 6:20,24).

தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப்பெறுவர் தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர் (லூக். 14:11).

இவ்வாறாக இயேசு இறையாட்சி எத்தகையோரது, யாருக்கு அதில் பங்குண்டு, என்ன மனநிலையோடு நாம் இறையாட்சியில் நுழைய முடியும் என்பதை தெளிவுபடுத்துகின்றார். அதிகாரத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் இறையாட்சியில் இடமில்லை. இறையாட்சியின் அதிகார அமைப்பில் மக்கள் ஒருவர் ஒருவர் மட்டில் அன்புடையவர்களாக, ஒருவர் ஒருவருக்குப் பணி செய்பவர்களாக் விளங்க வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்துகின்றார். பணி செய்வதுதான் அதிகாரத்தின் உட்பொருள் என்ற உண்மையை இயேசு உணர்த்துகின்றார். அதனால்தான் அவர் கூறுகிறார்: உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும் ; உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்.

உங்களுள் பெரியவராக இருக்க
விரும்புகிறவர் உங்கள் தொண்டராய்
இருக்கட்டும் உங்களுள்
முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர்
அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளாட்சியில் நிலவும் அதிகாரம் மக்களுக்கு பணி செய்வதற்கே அமைந்திருக்கும். அது மக்களது வாழ்வில் நன்மை கொணரும். இந்த அதிகாரம் தன்னலத்தை நாடாது மாறாக பிறரது நன்மைக்காக தன்னையே அழித்திடவும் தாராளமாக முன்வரும். இவ்வாறாக இந்த இறையாட்சி ஏழைகளிலே என்றும் தவழ்கிறது.

## இறையாட்சி மலர்வது எப்போது?

இறையாட்சி மலர வேண்டுமென்றால் மனிதர்கள் விசுவாசம் கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டும். இரக்கத்தோடு செயற்பட வேண்டும் என இயேசு கூறினார். அப்படி என்றால் எப்போது மலரும் இந்த இறையாட்சி?

> இறையாட்சி மலர வேண்டுமென்றால் மனிதர்கள் விசுவாசம் கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டும்.

இந்த வினாவோடு விடை தேடும் போது நாம் அறியும் உண்மை இறையாட்சி வருவது ஓர் அதிசய நிகழ்ச்சியாக இருப்பது போலவே அந்த ஆட்சியில் மனிதர் கொள்ளும் விசுவாசமும் ஆழ்ந்த நம்பிக்கையும் கூட ஓர் அதிசய நிகழ்ச்சியாகவே இருக்கும்.

ஆனால் இறையாட்சி வந்தே தீரும் என்பது குறித்து இயேசு எந்த விதத்திலும் ஐயப்பட்டதில்லை. இறையாட்சியின் வருகை பற்றி இயேசு என்றுமே உறுதியாய் இருந்தார். மக்களின் விசுவாசக் குறைவு காரணமாக இறையாட்சி வரக் காலதாமதம் ஏற்பட்டாலும் அந்த ஆட்சி இறுதியில் கட்டாயம் வரும் என்று இயேசு கூறினார். கடவுளாட்சி வந்தே தீரும் என்பது இயேசுவின் முழு நம்பிக்கையாக இருந்தது. அதனால் தான் இயேசு இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்ற முழக்கத்தோடு தம் பணியைத் தொடங்கினார்.

எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும், எந்தவித தடைகள் ஏற்பட்டாலும், அவை எல்லாவற்றையும் தாண்டி இறையரசு வந்தே தீரும் என்பதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் எதிர்பார்ப்பாய் இருந்தது. கடவுளாட்சி இந்த நாளில் இந்த மணி நேரத்தில் வரும் என்று துல்லியமாக நமக்கு தெரியுமென்ன இயேசு கூறிவிடவில்லை. தந்தைக்கு தவிர வேறு யாருக்கும் தெரியாது என இயேசு தெட்டத்தெளிவாக கூறுகின்றார். இதன் காரணமாகத்தான் இயேசு விழித்திருக்க அழைக்கின்றார். ஏனெனில் திருடனைப் போலவும், மின்னலைப் போலவும் எதிர்பாராத வேளையில் இறையாட்சி தோன்றும். இறையாட்சி எப்போது வரும் என்று எவருக்குமே தெரியாததால் நாம் எப்போதும் விழித்திருக்க வேண்டும். ஆவலோடு காத்திருக்க வேண்டும்.

## இறையாட்சியின் நிறைவும் விண்ணேற்பும்

இறையாட்சி இயேசுவில் பூரணத்துவம் பெற்றது. இது இன்றும் தொடர்ந்து பரந்து செல்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பு இதற்கு சான்று பகர்கின்றது. இறைவன் தமது தூய ஆவியாரைக் கொண்டு திருச்சபையை செயற்படுத்துகின்றார். தூய ஆவியார் அடையாளங்களைக் காட்டுகின்றார்.

கிறிஸ்துநாதர் வெளிப்படுத்தியதன்படி உடலாலும், உள்ளத்தாலும், ஆன்மாவாலும் பூரணத்துவம் பெற்றது. இறையாட்சியில் பூரணத்துவம் பெற்றதாகும். அதற்காக சான்று பகர்ந்து சிலுவை மரணத்திற்கு உட்பட்ட கிறிஸ்து நாதருடைய செயற்பாடு உயிர்ப்பின் மூலம் நிறைவு பெற்றது. புதிய படைப்பு என்ற நிலைக்கு உயர்த்தப்பட்ட அவர் விண்ணேற்பு மூலம் மனிதத்துவத்தை மேலான ஒரு திருநிலைக்கு உயர்த்தினார். "தூயஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று ஜெருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.தூ..ப 1:8)

> புதிய படைப்பு என்ற நிலைக்கு உயர்த்தப்பட்ட அவர் விண்ணேற்பு மூலம் மனிதத்துவத்தை மேலான ஒரு திருநிலைக்கு உயர்த்தினார்.

இவ்வாறாக இறையாட்சிக்குச் சான்று பகிர நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். இறையாட்சியின் விழுமியங்களை பாதுகாக்க அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடையச் செய்ய அயராது ஒத்துழைப்பு நல்க வேண்டும். நாம் திருச்சபையின் உறுப்பினர்கள் என்ற முறையில் கிறிஸ்தவ மதிப்பீடுகளை எம்மில் உறுதிப்படுத்த, அந்த மதிப்பீடுகளை நாம் வாழும் சமூகத்தில் வளரச்செய்ய, பரவச் செய்ய கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

சமாதானம், ஒற்றுமை, சமத்துவம், பொதுத்தன்மை, நீதி போன்ற மதிப்பீடுகளை வெறுமனே வார்த்தை வடிவில் போதிக்காமல் எமது செயற்பாட்டில் செயற்படுத்தும்போது இறையாட்சியில் நிறைவை கொணரும் என்பதில் ஐயமில்லை.

## முடிவாக

பட்டம் பதவியை அணிகலங்களாகக் கொண்டு கடமைகளில் இருந்து நழுவிவிடுவது இன்று ஒரு சர்வசாதாரண செயலாக இருக்கின்றது. தலைமைக் குருவான இயேசு, தமது தலைமைத்துவ நிலையில் இருந்து தம்மைத் தாழ்த்தி சீடர்களின் பாதங்களை கழுவிய செயலின் மூலம் நாமும் எமக்களிக்கப்பட்ட அதிகாரம், பொறுப்புக்கள் போன்றவற்றை ஏற்று, இயேசுவின் வாழ்க்கையை பின்பற்றி சேவை புரிபவர்கள் ஆவோம். இறையாட்சியின் பரம்பலுக்காக பரிசுத்த திருச்சபை மேற்கொள்ளும் பலவித பணிகளில் ஈடுபட்டு உழைப்பதன் மூலம் இறையாட்சியின் சாட்சிகளாக திகழ முயல்வோம். பகிர்வோம், வாழ்வோம், நற்செய்தியின்படி நடப்போம்.

> பகிர்வோம், வாழ்வோம்,
> நற்செய்தியின் படி
> நடப்போம்.

## உசாத்துணை நூல்கள்


- பொது திருவிவிலியம்
- பவுல் லியோன், யார் இந்த இயேசு? திண்டுக்கல், வைகறைப் பதிப்பகம், 1995.
- கத்தோலிக்க திருமறை–11ம் தரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,2004




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பமும் சாவும் எதற்காக ?

அருட்சகோ. தா. ஆன்சன் றெஜிக்குமார் அ.ம.தி

யூத மக்கள் பல நூற்றாண்டுகளாகக் கொடுமையும் துன்பமும் அனுபவித்தவர்கள். சட்டத்தை மீறுவதைவிட சாவதே மேல் என்று யூதர் எண்ணினர். இயேசுவின் வருகைக்கு 2 நூற்றாண்டுகளுக்கு முன்பு மக்கபேயர் ஆகமத்தில் கூறப்படுவது போல பல இளம் யூதர்கள் துன்புறுத்தப்பட்டு வீர மரணத்தைத் தழுவினர். சமய நம்பிக்கைக்காக ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் உரோமையர்களால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்கள். இயேசுவின் காலத்தில் இறைவாக்கினர் பற்றிய கருத்து "சமய நம்பிக்கைக்காக துன்பங்கள் அனுபவித்து தியாகிகளாக உயிர் துறந்தோர்" என்ற விதத்தில் உருப்பெற்றது. "மறைசாட்சி" என்ற கருத்தானது யூத மரபிலிருந்து கிறிஸ்தவர்களால் பெறப்பட்டது.

இயேசுவும் சீடர்களும் நீதி நேர்மையோடு நடந்தவர்கள். இவ்வாறு நடப்பவர்களுக்கு துன்பமும் துயரமும் பரிசாகக் கிடைக்கும் என்று இயேசு நிச்சயம் எதிர்பார்த்தார். இறைவாக்கினர்களைப் போலவே தாமும் மறைசாட்சி மரணத்துக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று இயேசுவும் சீடர்களும் எண்ணியிருக்க வேண்டும். அவரது போதனையின்படி கடவுளாட்சியின் வருகை துன்பம் மற்றும் சாவோடு நெருங்கிப் பிணைந்ததாகவே இருக்கும். கடவுளாட்சியை உரிமையாக்கிக் கொள்கின்ற ஏழை எளியவர்களோடும்,

> கடவுளாட்சியை உரிமையாக்கிக் கொள்கின்ற ஏழை எளியவர்களோடும், ஒடுக்கப்பட்டவர்களோடும் இயேசுவும் சீடர்களும் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்டவர்களோடும் இயேசுவும் சீடர்களும் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டனர். அவர்கள் மேல் பரிவு கொண்டனர். இக்காரணத்துக்காகவே இயேசுவும் சீடரும் துன்புறுத்தப்படலாயினர்.

துன்பத்தை ஒழித்திட வேண்டும் என்பதில் இயேசு உறுதியாக இருந்தார். துன்பத்தை ஒழிப்பதற்கான ஒரே வழி ஒருவன் உலக மதிப்பீடுகளைக் கைவிட்டு அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். துன்புறும் மனிதர்களோடு ஒருவன் சேர்ந்து துன்புறும் போது அவன் காட்டும் இரக்கம் துன்பத்தைப்போக்குகின்றது. துன்புறுவோருக்கு அளிக்கப்படுகிற இறை ஆசியைப் பெற வேண்டும் என்றால் துன்புறுவோரோடு சேர்ந்து நாமும் துன்புற வேண்டும். இதுவே "இரக்கத்தின் புதிர்" (Paradox of Compassion)

> துன்புறுவோருக்கு அளிக்கப்படுகிற இறை ஆசியைப் பெற வேண்டும் என்றால் துன்புறுவோரோடு சேர்ந்து நாமும் துன்புற வேண்டும்.

துன்பம் ஒரு புதிர் என்றால் சாவு அதை விடவும் பெரிய புதிர். இயேசுவின் கருத்துப்படி "தன்னுயிரைக் காப்பவன் அதனை இழப்பான், தன்னுயிரை இழப்பவன் அதனை காப்பான்" (மத். 10:39, லூக் 14:26, யோவா. 12:25). தன்னுயிரைக் காப்பது என்றால் தன்னுயிர்மேல் மிதமிஞ்சிய பற்றுக் கொண்டு அதை விடாப்பிடியாக பிடித்துக் கொள்வது, சாவைக் கண்டு பயந்து நடுங்கி நிற்பது "தன்னுயிரை இழப்பது" என்பது தன்னுயிர்மேல் மித மிஞ்சிய பற்று இல்லாமல் இருப்பது ; தன்னுயிரை ஒரு பொருட்டாக மதிக்காமல் இறப்பதற்கு தயாராக இருப்பது சாவைக் கண்டு அஞ்சுகிறவன் ஏற்கனவே செத்து விட்டான். சாவைக் கண்டு அஞ்சவில்லையோ அவன் வாழத்தொடங்கிவிட்டான். இயேசுவின் கருத்துப்படி நாம் பிறருக்காக இறக்கத் தயாராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து மனிதருக்காகவும் தம் உயிரைக் கையளிக்க முன்வந்த இயேசு அனைவருக்கும் புரிந்த சேவையாகத் தம்முயிரை ஈந்தார். இயேசு தம்மை மெசியா என அறிவித்துக்கொண்டு வன்முறையை அவர் பிரயோகிக்க விரும்பவில்லை. அதிகாரிகளைப் பகைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் தம்முடைய போதனையின் வேகத்தையும், சக்தியையும் குறைக்க அவர் எண்ணவில்லை. இயேசுவின் ஒரே ஆயுதம் விசுவாசம், நம்பிக்கை. "கடவுளாட்சி" வரும் என்று மனிதர்கள் உறுதியாக நம்ப வேண்டும், இந்த நம்பிக்கையை அவர்களது உள்ளத்தில் உருவாக்க வேண்டும் என்பதுதான் எப்போதுமே அவரது நோக்கமாக இருந்தது. வார்த்தைகளை விட செயல்களே வலிமை வாய்ந்தவை. ஆனால் செயல்களை விடவும் வலிமை வாய்ந்தது சாவு. எனவே இறையாட்சிக்கு சான்று பகர இயேசு இறந்தார். இயேசுவின் மரணத்தின் விளைவுகளுள் ஒன்று பாவ மன்னிப்பாகும். கடவுள் மன்னிக்கத் தயாராக இருக்கின்றார். இயேசுவின் சாவு இதை வெளிப்படுத்துகிறது.

இயேசு தாம் இறக்கப்போவதை முன்னுணர்ந்தவராக தாமாகவே விரும்பி மரணத்தைத் தேர்ந்து கொண்டு தம் வாழ்வின் இறுதியை எதிர்நோக்கிப் பயணம் செய்தார் என்பதில் எந்த ஐயமுமில்லை. இயேசு தமது பாடுகள் மரணம் பற்றி முன்கூட்டியே அறிந்திருந்தார். இயேசு தமது உயிர்ப்புப் பற்றியும் முன்னறிவித்திருக்கலாம். கடைசி நாள் விரைவில் வரும் என்று அவர் கூறியிருந்தார். இயேசுவும் பரிசேயரோடு உயிர்ப்பில் நம்பிக்கை வைத்திருந்தார். அவர் சுயமாக உயிர்ப்பு எனும் பொருள்பற்றி எங்கும் விளக்கிச் சொல்லவில்லை. சமகால யூதர்கள் நம்பிய உண்மைகளோடு உயிர்ப்பு பற்றிய உண்மையையும் இயேசு நம்பினார் என்பது தெளிவு. ஆனால் இயேசுவின் மரணத்துக்குப் பின்பு நிலமை முற்றிலும் மாறிவிட்டது உயிர்ப்பு மையப் பொருளாக மாறிற்று.

## உசாத்துணை நூல்கள்

அருட்திரு. பவுல் லியோன், யார் இந்த இயேசு? திண்டுக்கல், வைகறைப் பதிப்பகம், 1995.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய பவுலின் திருமடல்களில் தூய ஆவியார்

அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்

## முன்னுரை

திருச்சபை வரலாற்றில் தூய பவுலிற்கு சிறப்பானதொரு இடம் உண்டு. தமஸ்கு நகர்க்கருகில் கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்டு பிறஇன மக்களுக்கு நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொண்டு பிறஇனத்தவரின் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டார் . தனது தூதுரைப் பயணங்கள், அயராத போதனைப் பணி, கருத்தாழம் மிக்க திருமடல்கள் போன்றவற்றின் மூலம் திருச்சபையில் மாபெரும் தாக்கத்தினை ஏற்படுத்தினார்.

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களில் 13நூல்கள் தூய பவுலின் திருமடல்கள் ஆகும். புதிய ஏற்பாட்டில் இவரின் திருமடல்கள் வகிக்கும் முக்கிய பங்கை இது சுட்டுகின்றது. புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களுள் இவரே தூய ஆவி பற்றி முதன் முதல் பேசியவர், எழுதியவர். இவர் பிலமோனிற்கு எழுதிய திருமடலைத்தவிர ஏனைய திருமடல்களில் தூய ஆவி பற்றி மிகவும் விளக்கமாக, விரிவாக எழுதுகிறார் இதன் காரணமாக 'தூய ஆவியின் இறையியலாளர்', என்று இவர் அழைக்கப்படுகின்றார்.

'தூய ஆவியின் இறையியலாளர்' என்று பவுல் அழைக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய ஆவி...?

யார் இந்த தூய ஆவி? இவர் கடவுளின் ஆவி (உரோ. 8:9) கடவுளின் கொடை (1கொரி. 2:12). இயேசுக்கிறிஸ்து கடவுளின் வல்லமையாகவும் (1 கொரி. 1:24). உயிர் தரும் ஆவியாகவும் (1 கொரி. 15:45) விளங்குவதன் காரணமாக தூய ஆவி கிறிஸ்துவின் ஆவி (உரோ. 8:9) என்றும், இறைமகனின் ஆவி (கலா. 4:6) என்றும், ஆண்டவரின் ஆவி (2 கொரி. 3:17) என்றும் அழைக்கப்படுகின்றார். தூய பவுல் இயேசுக் கிறிஸ்துவையும், தூய ஆவியையும் வேறுபடுத்தி நோக்கவில்லை. 2 கொரி 3:17இல் ஆண்டவர் என்பது தூய ஆவியாரைக் குறிக்கிறது என்பதனூடாக இது புலனாகிறது.

பவுல் அடிகளார் தூய ஆவியின் இயல்பு, பண்புகள் பற்றி அல்ல, மாறாக அவருடைய செயற்பாடுகள் எப்படிப்பட்டவை, என்பது பற்றியே தனது மடல்களில் எழுதுகிறார். சிறப்பாக தூய ஆவி எவ்விதமாக கிறிஸ்தவர்களோடு இருந்து அவர்களது வாழ்வைப் புதுப்பித்து நெறிப்படுத்துகிறார் என்பதை எடுத்துரைக்கிறார். விசுவாசமின்றி ஒருவன் தன்னை நற்செய்திப் பணிக்கு அர்ப்பணிக்கமுடியாது. தூய ஆவியின் அருளாலும், ஆற்றலாலுமே ஒருவன் விசுவாசம் உள்ளவனாகிறான். ஏனெனில் உயிருள்ள விசுவாசம் முழு மனிதனையும் ஆட்கொண்டு அவனது முழுவாழ்வையும் விசுவாச வாழ்வாக மாற்றுகிறது. தூய ஆவி விசுவாசத்திற்கு ஊட்டமளித்து, அதை ஆழமாக்கி, இறைவார்த்தையை அறிக்கையிடுவதற்கு உயிரூட்டமும் செயலாற்றலும் அளிக்கிறார் (1தெச 1:5, 4:8), இறைவார்த்தையைக் கேட்பதற்கு உதவுகின்றார் (2கொரி 3:14-15), என்கிறார் தூய பவுல்.

> தூய ஆவி விசுவாசத்திற்கு ஊட்டமளித்து, அதை ஆழமாக்கி, இறைவார்த்தையை அறிக்கையிடுவதற்கு உயிரூட்டமும் செயலாற்றலும் அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவரின் ஆவி

கடவுளின் படைப்பின் ஆற்றலையும், அவரின் பராமரிப்பு, மீட்புச் செயல்கள் ஆகியவற்றையும் குறிக்க கடவுளின் ஆவி செயற்படுவதை பழைய ஏற்பாட்டில் நாம் காணலாம் (சா.ஞா. 7:25, தொ.நூல் 1:2). பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலில் கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால் நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல என்கிறார் (உரோ. 8:9). தொடர்ந்து இறை ஆவியையும், கிறிஸ்துவின் ஆவியையும் பற்றிக் குறிப்பிட்டு இரண்டையும் இணைத்துப் பேசுகிறார், (உரோ. 8:11-13). மேலும் தனது உயிர்ப்பினூடாக தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டார் என்றும் (உரோ. 1:4) இதன் காரணமாக கடைசி ஆதாமாகச் செயற்பட்டு அவர் 'உயிர்தரும் ஆவியானார்' (1கொரி 15:45) என்றும் குறிப்பிடுகிறார். இன்னும் ஒருபடி மேலே சென்று 'மகனின் ஆவி' என்றும் (கலா. 4:6), 'இயேசுக்கிறிஸ்துவினுடைய ஆவி' என்றும் (பிலி. 1:19) குறிப்பிட்டு இறுதியில் ஆண்டவரே ஆவியென்ற தொனியில் "ஆவியாம் ஆண்டவரின் செயலே' என்று எழுதுகிறார் (2கொரி 3:18)

> கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால் நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள்.

மேலும் இந்த ஆண்டவரின் ஆவி ஒருவனிடம் குடிகொண்டிராவிடில் அவன் கிறிஸ்தவன் அல்லன் என்று கூறும் பவுல் (உரோ.8:9) அந்த ஆவிக்குத் துயரம் விளைவிக்கக் கூடிய அளவில் நாம் வாழக் கூடாது என்று எச்சரிக்கையும் செய்கிறார். கடவுள் எமக்குத்தந்த கொடைதான் தூயஆவி. கடவுள் மேல் கொள்ளும் நம்பிக்கையால்தான் நாம் தூய ஆவியைப் பெற்றுக் கொள்கிறோம் (கலா. 3:2) கிறிஸ்துவின் நற்செய்தியினை நம்பிக்கையுடன் கேட்டு, அதை ஏற்றுக்கொள்ளும் போது கடவுள் மேலுள்ள நம்பிக்கை நம்மில் அதிகரிக்கிறது. இதன் மூலமாக நாம் தூய ஆவி என்ற கொடையைப் பெறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவு வாழ்வில் தூய ஆவி

திருமுழுக்குப் பெற்றவர்களுள் தூய ஆவி குடிகொள்கிறார். இதன் காரணமாக அவர்கள் கடவுளின் மக்கள் ஆகிறார்கள். அதாவது தூய ஆவியால் ஆட்கொள்ளப்படும் கிறிஸ்தவர் அனைவரையும் கடவுள் தம் சொந்தப் பிள்ளைகள் போல தத்தெடுத்துக் கொள்கிறார். கிறிஸ்து ஒருவரே இறைவனின் இயல்பான மகன், தலைமகன் (உரோ. 8:29).

> தூய ஆவியால் ஆட்கொள்ளப்படும் கிறிஸ்தவர் அனைவரையும் கடவுள் தம் சொந்தப் பிள்ளைகள் போல தத்தெடுத்துக் கொள்கிறார்.

கிறிஸ்தவர்களோ இறைமகன் இயேசுவில் தூய ஆவி வழியாக இறைவனால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாவர்.

தூய ஆவி கிறிஸ்தவர்களைக் கிறிஸ்துவோடு ஒன்றிக்க வைத்துத் தந்தையோடு தனிப்பட்ட உறவு கொள்ளச் செய்கிறார். அடிமைகளாக அல்ல மாறாக, உரிமைக் குடிமக்களாக ஏற்றுக்கொள்கிறார். இறைவன் மனிதர் செய்யும் குற்றங்களை மன்னிக்கிறார். இதற்குத் தூய ஆவியே சாட்சி. ஏனெனில் மனிதர் இறைவனின் பிள்ளைகள் ஆவதற்கு அடிப்படையான உயிராற்றலை அளிப்பவரும் இப்புதிய நிலையைக் கண்டுணரும் ஆற்றலை வழங்குபவரும் அவரே. தூய ஆவியின் செயலால்தான் கிறிஸ்தவர்கள் இறைவனைத் தம் தந்தை என அழைக்கிறார்கள் என்கிறார் பவுல். மேலும் "நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார்" (உரோ. 8:16) என்கிறார்.

கிறிஸ்தவர்கள் தந்தையாம் இறைவனோடும் இறைமகன் கிறிஸ்துவோடும் புதியதோர் உறவு கொள்ள வழிகோலும் தூயஆவி அந்த உறவிலே நாளும் வளரவும் உதவுகிறார். அதாவது எவ்வாறு இறைவனிடம் வேண்டுவது என்பது பற்றி சொல்லிக் கொடுத்து இறைமக்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உரோ. 8:26-27) நம்மில் இருந்து கொண்டு நம்மை இயக்கும் தூய ஆவியே நம் சார்பாக நம்மோடு சேர்ந்து இறைவேண்டல் செய்கிறார்.

திருமுழுக்குப் பெறுவோர் தூய ஆவியின் முத்திரையைப் பெறுகிறார்கள், அவர்கள் இறைவனுக்குச் சொந்தம் ஆகிறார்கள், பிள்ளைகள் ஆகிறார்கள். மேலும் பேரின்ப உண்மையையும், மீட்பு வாழ்வுக்கான உரிமையையும் பெற்றுக்கொள்கிறார்கள். இவ்வாறு இறையுறவில் வாழ்ந்து அதில் நாளும் வளர்வதே உண்மையான கிறிஸ்தவ வாழ்வு ஆகும்.

இறையுறவில் வாழ்ந்து அதில் நாளும் வளர்வதே உண்மையான கிறிஸ்தவ வாழ்வு ஆகும்.

## துணை நிற்கும் தூய ஆவி

கிறிஸ்தவர்கள் பலவகையான தளைகளிலிருந்து விடுதலை பெற்று விட்டாலும், தீமையின் ஆவியைத் தொடர்ந்து சுமக்க வேண்டியிருக்கிறது. தீய ஆற்றல்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. குறிப்பாகத் தம்முள் குடிகொண்டுள்ள பாவஇயல்பை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. ஊனியல்பும், ஆவியும் ஒன்றுக்கொன்று எதிரானவைகள். ஊனியல்பு அவர்களை அழிவுக்கு இட்டுச்செல்ல, ஆவியோ வாழ்வின் பக்கம் இழுக்கிறது. இதன் காரணமாக அவர்கள் பிளவுபட்ட வாழ்க்கை வாழ வேண்டியிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையே நீண்டதொரு போராட்டமாக பல நேரங்களில் மாறிவிடுகிறது. இது பற்றி பவுல் பல இடங்களில் எழுதுகிறார் (உரோ. 7:14-25, 8:3-8).

இந்தப் போராட்டத்தை ஆவிக்குரியவர்களுக்கும், மனித இயல்பை மட்டும் கொண்டவர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டமாகவும் (1கொரி 2:13-3:3). தூய ஆவியின் கனிகளுக்கும் ஊனியல்பின் செயல்களுக்கும் இடையே நடக்கும் போராட்டமாகவும் பவுல் பார்க்கிறார் (கலா. 5:16-26). இத்தகைய போராட்டங்களின் போது கிறிஸ்தவர்களோடு இருந்து அவர்களுக்குத் துணை நின்று தேவையான ஆற்றல் வழங்கி விடுவித்து உரிமை வாழ்வில் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கச் செய்பவர் தூய ஆவியே. "தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார்" (உரோ. 8:26).

இவ்வாறாக தூய ஆவியின் துணைகொண்டு அனைத்தையும் அறிந்து தெளிந்து வாழ்க்கையைத் தொடர்பவர்களே ஆவிக்குரியோர் ஆவர். அவர்களின் வாழ்வில் ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை வெளிப்படும் (கலா. 5: 22-23).

> தூய ஆவியின் துணைகொண்டு அனைத்தையும் அறிந்து தெளிந்து வாழ்க்கையைத் தொடர்பவர்களே ஆவிக்குரியோர் ஆவர்.

## ஒவ்வொருவரிலும் செயற்படும் தூய ஆவி

தூய ஆவி தனி மனித வாழ்வில் மட்டும் அருஞ்செயல்களோ, அற்புதங்களோ ஆற்றுபவர் அல்ல. மாறாக ஒவ்வொரு குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும், ஏன் திருச்சபை முழுவதிலுமே பல்வேறு புரட்சிகளை ஏற்படுத்தி முன்னேற்றகரமான முறையிலே புதிய தடங்களையும், திருப்பங்களையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துபவர். இதனால் தூய பவுல் திருச்சபையை ஆவியின் அருட்கொடைகளைப் பெற்ற திருக்கூட்டமாக, மக்கள் இயக்கமாகக் காண்கிறார் (1கொரி 12:1-14:40, உரோ. 12:6-8, எபே. 4:1-16).

திருச்சபை இவ்வுலகில் மக்களை நல்வழியில் நடத்த வேண்டும். அவர்கள் இறைவனை நாடித்தேடிவர தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதற்காக தூய ஆவி திருச்சபை மீது பல்வேறு வரங்களைப் பொழிகிறார். இவை அருள் கொடைகள் என அழைக்கப்படுகின்றன. "நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம் இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்கு பயன்படுத்த வேண்டும். கற்றுக்கொடுப்போர், கற்றுக்கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்" (உரோ. 12:6-8).

எனவே இவ்வகையான அருள்கொடைகளைப் பெற்றிருப்பவர்கள் தூய ஆவியின் துணையுடன் அவற்றை இனங்கண்டு, வளர்த்து அதனூடாக திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், ஏனையோரின் நன்மைக்காகவும் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.

தூய ஆவியின் வரங்களை திருத்தொண்டுகள் எனவும் அழைக்கலாம். திருத்தூதர், இறைவாக்கினர், நற்செய்தியாளர், ஆயர்கள் போன்றவர்களின் பணி திருத்தொண்டாகக் கொள்ளப்படுகிறது. இவர்கள் தங்கள் திருத்தொண்டுப் பணியினூடாக இறைமக்களை திருத்தொண்டாற்ற ஆயத்தப்படுத்துகிறார்கள். அத்துடன் கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பும் பணியிலும் தங்களை அர்ப்பணிக்கிறார்கள் (எபே. 4:11-12)

தூய பவுல் தூய ஆவியின் வரங்களை செயல்பாடுகள் எனவும் குறிப்பிடுகிறார். அதாவது பொது நன்மைக்காகவே ஒவ்வொருவரிலும் தூய ஆவியின் செயல்பாடுகள் வெளிப்படுகிறது என்கிறார். அத்தோடு ஞானம் நிறைந்த சொல்வளம், அறிவு செறிந்த சொல்வளம், நம்பிக்கை, பிணி தீர்க்கும் அருள்கொடை வல்லசெயல் செய்யும் ஆற்றல், இறைவாக்குரைக்கும் ஆற்றல், ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றல், பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றல்,

பொது
நன்மைக்காகவே
ஒவ்வொருவரிலும்
தூய ஆவியின்
செயல்பாடுகள்
வெளிப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசப் பேச்சை விளக்கும் ஆற்றல் போன்றவற்றை ஒவ்வொருவருக்கும் வழங்கி எல்லாவற்றையும் செயல்படுத்தி நெறிப்படுத்துகிறார் (1கோரி. 12:7-11).

இறைத்தந்தையும், இயேசுக்கிறிஸ்துவும் அனுப்பி வைத்த கொடையே தூய ஆவி. எனவே இலவசமாகக் கொடுக்கப்படும் கொடைகள் என்னும் முறையில் அருள் கொடைகள் அனைத்தும் தூய ஆவிக்கு உரித்தாக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் தூயஆவியின் அருள்கொடைகள் அருளப்படுவது திருச்சபைச் சமூகத்தை மட்டும் வளர்ச்சியடையச் செய்வதற்கு மட்டுமல்ல. மாறாக பரந்து விரிந்து இருக்கின்ற மானுட சமுதாயத்திற்கும் அதன் மூலமாக ஆண்டவருக்கும் பணிபுரியவே அருள் கொடைகள் அருளப்படுகிறது. எனவே கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக்கொண்ட அருள்கொடைகளை தத்தம் சொந்த நலனுக்காகவோ பெருமைக்காகவோ பயன்படுத்தக்கூடாது. மாறாக, திருச்சபையின் வளர்ச்சிக்காக அதைக் கட்டியெழுப்புவதற்காக, ஒருவரை ஒருவர் ஊட்டி வளர்ப்பதற்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

> பரந்து விரிந்து இருக்கின்ற மானுட சமுதாயத்திற்கும் அதன் மூலமாக ஆண்டவருக்கும் பணிபுரியவே அருள்கொடைகள் அருளப்படுகிறது.

அருள்கொடைகள் ஒரு சிலருக்கு மட்டுமல்ல, திருச்சபைச் சமூகம் முழுவதற்கும் அதன் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்றது. ஆயினும் எல்லா வரங்களும் எல்லாருக்கும் கொடுக்கப்படுவதில்லை. தூய ஆவி அவற்றைத் தம் விரும்பம்போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கிறார் (1கொரி 12:11). எனவே திருச்சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் உடலின் உறுப்புக்கள் போன்று ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்பட்டு, எனக்கு அந்த ஆற்றல் இல்லையே, இந்த வரம் எனக்கு கொடுக்கப்படவில்லையே என்று கவலைப்பட்டு தங்களுக்குள் முரண்பட்டு பிரிவினைகளை ஏற்படுத்தாது அன்பால் கட்டப்பட்டு ஒருவரையொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன் முறையில் புரிந்துகொண்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். ஒருவரையொருவர் தாங்கி, மற்றவர் விடும் சிறுசிறு தவறுகளை மன்னித்து, ஒவ்வொருவரையும் அவரவர் குற்றங்குறைகளோடு ஏற்று வாழ்ந்து கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையை கட்டிக்காத்து வளர்க்க வேண்டும் (1கொரி. 12:12-26, உரோ. 12:4-8, எபே. 4:1-13).

ஒருவரையொருவர் தாங்கி, மற்றவர் விடும் சிறுசிறு தவறுகளை மன்னித்து, ஒவ்வொருவரையும் அவரவர் குற்றங்குறைகளோடு ஏற்று வாழ்ந்து கிறிஸ்துவின் திருவுடலாகிய திருச்சபையை கட்டிக்காத்து வளர்க்க வேண்டும்

தூய ஆவியின் அருள்கொடைகள் அனைத்தும் ஆதித் திருச்சபையில் பட்டங்களாகவோ, பதவிகளாகவோ கருதப்படவில்லை. மாறாகத் திருப்பணிகளாகவே கருதப்பட்டன. எல்லாத் திருப்பணியாளர்களும் தங்களுக்கிடையேயான வேறுபாடுகளைத் துறந்து திருச்சபையின் பொது நலனைக் கருத்திற்கொண்டு அதனை முன்னிலைப்படுத்தி ஒன்றிணைந்து செயற்பட்டார்கள். காலப்போக்கில் தான் திருப்பணிகள் திருப்பட்டங்களாக, பதவிகளாக மாறின. திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், துறவியர், பொதுநிலையினர் என்னும் திருஆட்சி அமைப்பு முறை நுழைந்தது எனலாம்.

## முடிவுரை

இன்று நாம் வாழுகின்ற நாடு, சமூகம், மொழி, இனம், குலம், யாவும் மனிதனை மனிதனினின்று பிரிக்கும் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கிறிஸ்து அவனிக்கு அளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டன. மனிதனுடைய அறிவும், நாகரீகமும், பண்பாடும் பல வெற்றிகளை உலகிற்கு அளித்த போதும் போரை உலகின்று ஒழிக்கவில்லை. நாளும் துன்ப சுமைகளைச் சுமந்தவர்களாக, கவலையோடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரோடும், பசியோடும், பிணியோடும், பயத்தோடும் வாழும் எமக்கு தூய பவுல் தனது திருமடல்களில் தூயஆவி பற்றி வெளிப்படுத்தும் கருத்துக்கள் நம்பிக்கையும், ஆறுதலையும் அளிக்கின்றன. இவர் அனைவருக்கும் மேற்பட்டவர் தந்தையோடும், மகனோடும் வல்லமையிலும், நித்தியத்திலும், மகத்துவத்திலும், சமமானவர். உலகைப் புதுப்பிக்க, புது ஞானப் பிறப்பளிக்க, குணப்படுத்த, மீட்க, திருச்சபையைக் கட்டியெழுப்பி வளர்க்க, மறைபரப்பும் பணியாளர்களோடு இருந்து உதவுபவர் இந்த தூய ஆவி தான். நிலையாக ஆனால் மறைவாக இவ்வுலகத்தில் தங்கியிருந்து செயலாற்றுபவரும் இவரே. நமது ஆத்துமத்தின் உயிராக, திருச்சபையின் உயிர்மையமாக வாழ்கின்றவரும் இவரே. ஞானத்தை ஊட்டி, மனித பயத்தைப் போக்கி, தெய்வ பயத்தை உண்டாக்கி அன்புச் சுடரை ஒளிரச் செய்து, என்றும் எம்முடன் வாழும் தூய ஆவியை எங்கள் இதயத்தில் சுமப்போம்.

ஞானத்தை ஊட்டி, மனித பயத்தைப் போக்கி, தெய்வ பயத்தை உண்டாக்கி அன்புச் சுடரை ஒளிரச் செய்து, என்றும் எம்முடன் வாழும் தூய ஆவியை எங்கள் இதயத்தில் சுமப்போம்.

## உசாத்துணை நூல்கள்


1. அ.பீட்டர் அபீர், பவுல் துறவியா? தூதுவரா?, சென்னை, தூய பவுல் விவிலிய நிலையம், 2001.
2. விவிலிய விருந்து, ஜூலை 2007.
3. விவிலிய விருந்து, ஆகஸ்ட் 2007.
4. திருவிவிலியம், திண்டிவனம், டிவைன் பிரின்டேர்ஸ், 2000.
5. Class notes on pauline letters, given by Rev. Fr. Jesuthasan OMI
6. Mr. S. பிலிப், Mrs. இம்மாகுலேட் பிலிப், தூய ஆவியார் அருளும் வாழ்வைத் தேடி, சென்னை, தூய பவுல் அச்சகம், 2004.
7. William Barclay, The mind of Paul, Fontana Books, London, 1963.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியலாளர் இவ்விதழின் 28

## லெயோன்ஸ் நகரத்து புனித இரனேயஸ்

(130-200கி.பி)

அருட்சகோ. தி. குயின்சன் பெர்னாண்டோ

திருச்சபையின் தந்தையர்களில் ஒருவரான புனித இரனேயஸ் 2ம் நூற்றாண்டின் மிக முக்கியமான இறையியலாளர் ஆவர். இவர் கத்தோலிக்க "இறையியல் கோட்பாட்டின் தந்தை" என அழைக்கப்படுகின்றார். இவர் சின்ன ஆசியாவில் பிறந்து தமது இளமைப்பருவத்திலே புனித பொலிக்காப்பின் சீடனாக தன்னை மாற்றி பின்பு 177ம் ஆண்டில் லெயோன்ஸ் நகரத்தில் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்பு அந்நகரத்திற்கே ஆயராக நியமிக்கப்பட்டார். இவர் அறிவியல் வாத பேதகத்திற்கெதிரான (Gnosticism) கருத்துக்களால் மிகவும் அறியப்பட்ட ஒரு நபராக கருதப்பட்டார்.

### படிப்பினைகள்

இவர் தனது வாழ்நாளில் அறிவியல்வாத பேதகத்துக்கு எதிராக வாதிட்டு திருச்சபையின் விசுவாசத்தை காத்துக்கொண்டார். சிறப்பாக அறிவியல்வாத பேதகரின் இருமை வாதத்திற்கு எதிராக செயற்பட்டு திருச்சபையின் விசுவாசத்தின் ஒருமைத் தன்மையை வலியுறுத்தினார். அதாவது ஒரே கடவுள், ஒரே இரட்சகர், ஒரே மனிதகுலம், ஒரே விசுவாசம், ஒரே திருச்சபை என்கின்ற தன்மையை வலியுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துவம் பற்றி புனித இரனேயஸ் கூறும் போது திருத்துவத்தில் மூன்று ஆட்களின் பெயர்களை பயன்படுத்தி மூன்று ஆட்களையும் முதல் தரத்திலே நிறுத்துகின்றார். தந்தையாம் கடவுள், வார்த்தையான இயேசு மற்றும் தூய ஆவி வழியாகவே அனைத்தையும் படைத்தார் ; ஆனால் வார்த்தையும், ஆவியும் தந்தையாம் கடவுளோடு ஒன்று பட்டவர்கள் என்பது இவரின் கருத்தாகும்.

கிறிஸ்துஇயல் தொடர்பான இவரின் கருத்துக்கள் மிகவும் சிறப்பானவையாகும். மனிதன் கட்டாயமாக நல்லவனாகவும், கெட்டவனாகவும் இருக்க முடியாது. ஆனால் ஆதாமின் தவற்றால் அவன் இயல்பிலே பாவம் செய்கின்றவனாக இருக்கின்றான்; ஆதாமே அவனுக்கு முதன்மையானவ்னாக இருக்கின்றான் புதிய ஆதாமாகிய கிறிஸ்து தந்தையாம் கடவுளோடு மனிதருக்கு முன்பு இருந்த உறவை மீளப்பெற்றுக் கொடுப்பவராக விளங்குகின்றார்; இயேசு கடவுளாகவும், வார்த்தையாகவும், கடவுளின் திருமகனாகவும் இருக்கின்றமையால் அவரால் இதைச்செய்ய முடிகின்றது என்பது புனித இரனேயஸ்சின் கருத்தாகும்.

மேலும் அவர் கூறுகையில் யேசுவே மனித இனத்தை படைத்தவர் என்றும் அவர் உண்மையில் ஒரு மனிதனாகவும், சகோதரனாகவும் விளங்குகின்றார் என்றும் குறிப்பிடுகின்றார். புனித இரனேயஸ் இயேசு ஓர் இரட்சகர் என்ற ஒருமைத் தன்மையில் இருந்து இயேசுவின் இரண்டு இயல்புகளான மனித, தெய்வீக இயல்புகளை ஒன்றிலிருந்து கொண்டு மற்றதனூடாகச் செயல்படும் தன்மை (Communication of idioms) ஊடாக சிறப்பாக விபரிக்கின்றார். இவரின் கருத்துப்படி இயேசு மூன்று விதமான பணிகளை ஆற்றினார். அதாவது வெளிப்படுத்தும் பணி, மீட்புப்பணி, தூய்மைப்படுத்தும் பணிஎன்பவைகளாகும்.

மரியியல் (Mariology) தொடர்பான புனித இரனேயஸ்சின் கருத்துக்கள் மிகவும் ஆழமானவை. மரியாளை புதிய ஏவாளாக வர்ணிக்கின்றார். பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவாள் கடவுளின் கட்டளையை அவமதித்தார் ஆனால் புதிய ஏவாளாகிய மரியாள் கடவுளுக்கு முழுவதும் தன்னை அர்ப்பணித்து தன்னை கீழ்ப்படித்தினார். ஏவாள் சாத்தானின் குரலுக்கு செவிசாய்த்தார் ஆனால் மரியாள் கடவுளின் குரலுக்கு செவிசாய்த்தார். இவ்வாறாக மரியாள் இறைத்திட்டத்துக்காக தன்னை முற்றுமுழுதாக கையளித்தார் என்று குறிப்பிட்டு மேன்மைப்படுத்துகின்றார்.

இவ்வாறு புனித இரனேயஸ் திருச்சபையின் கோட்பாடுகளை முழுவிசுவாசத்தோடு பல எதிர்ப்புகள் மத்தியில் பாதுகாத்து சிறந்த இறையியலாளராக இப்போதும் நினைவு கூறப்படுகின்றார்.

## உசாத்துணை நூல்கள்

Class notes on Patrology by Rev. Fr.Mangalarajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

*Our Pope Speakes:*

## Truthfulness in Communications

The diverse forms of communication-dialogue, prayer, teaching, witness, proclamation- and their different instruments-the press, electronics, the visual arts, music, voice, gestural art and contact-are all manifestations of the fundamental nature of the human person.

It is communication that reveals the person, that creates authentic and community relationships, and which permits human beings to mature in knowledge, wisdom and love.

However, communication is not the simple product of a pure and fortuitous chance or of our human capacity. In the light of the biblical message, it reflects, rather, our participation in the creative, communicative and unifying Trinitarian Love which is the Father, the Son and the Holy Spirit.

God has created us to be untied to him and he has given us the gift and the duty of communication, because he wants us to obtain this union, not alone, but through our knowledge, our love and our service to him and to our brothers and sisters in a communicative and loving relationship.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is self-evident that at the heart of any serious reflection on the nature and purpose of human communications there must be an engagement with questions of truth. A communicator can attempt to inform, to educate, to convince, to comfort; but the final worth of any communication lies in its truthfulness.

*Pope Benedict XVI*

## In Search of the Oppressed

The Speciality of Christianity lies in the very act of Incarnation. When the Lord Jesus Christ came to the earth in the form of a poor man, He identified himself with the poor and the various forms of the oppressed. The gift that He brought (with Him) for them was liberation which proceeds freedom. Even though they could not grasp the real meaning of liberation, Christ was more concerned in giving them a meaning for all trials and tribulations. His closeness with them, his miraculous power, above all his love and compassion slowly prepared them for a free life in the Kingdom of God to come.

The same Lord, these days too walks with us and identifies himself with the oppressed. As he knows well all the trials and devastations of war, we could certainly believe that he is near us and encourages us in faith.

A Christian is a person free from all bondages. He is given authority over all creation and over the powers of darkness. He cannot only satisfy with the privileges that he inherited by his very nature but he also is called to work with Christ in the work of salvation and so the bloom of the kingdom of God.

**Rev. Bro. J. Elmo Arulnesan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Prefiguration of Jesus Christ in the New Testament

Jesus was the Messiah about whom the prophets foretold down the centuries. When the appropriate time came Jesus started his ministry. The evangelists displayed John the Baptist as the one who prepared the way for the coming of Jesus.

John the Baptist was closely related to Jesus. By this exemplary ascetical life and effective preaching he prepared the people for the coming of the Messiah. John was not afraid to say the truth. He pointed out the mistakes of all the people without partiality and made them repent. He was courageous and single minded with regard to his call and was totally different from his contemporaries.

In the time of Jesus there were various groups with different policies. Nothing attracted Jesus to follow except John the Baptist himself.

Jesus opted to follow John and received baptism from him. It clearly shows that Jesus' mission falls in line with that of John.

Thus Jesus after receiving baptism began His ministry in calling people to repentance and preaching the message of salvation.

Thus Jesus baptism became the base for his passion, death and resurrection. That is the reason why John became the prominent personality who created a great impact in the life of Jesus. Therefore John is considered the greatest among all the other prophets.

***Rev. Bro. K. Luxman.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Teaching of Jesus about the Kingdom of God.

The Kingdom of God is a kingdom that liberates. It's main goal is to emancipate the poor and the outcast. The mission of Jesus was to establish this kingdom in this world, and His incarnation was based on it. The witnessing life of Jesus had fulfilled the will of the Father Jesus achieved this will of God the Father by his filial relationship with Him. He nourished and strengthened the people by the Word of God.

The aim of the Kingdom of God is to build up the society in the love and union with God. The compassionate love for the poor and for the outcast made him to uplift the down trodden of society.

There is a place for everybody in the Kingdom of God. Jesus who respected the humanity wished that all should enter the Kingdom of God. And also He wished that all should be loved in that Kingdom which embraces all without any discrimination. There is no place for enmity in His Kingdom and He called everyone to take part in this Kingdom. We should have faith to see the fulfillment of this Kingdom.

The Kingdom which was present in Jesus, now continues and spreads every where The Resurection of Jesus is the witnessing of this spreading. We are also called to be witnesses to this Kingdom.

Let us co-operate to spread, protect and help in the growth and the values of the kingdom. There is no doubt that we fulfill these beatitudes not only in preaching, but also in following them in our day today lives. Let us share, live and become witnesses of this Kingdom of God.

*Rev. Sr. Victorine Selvathy Malachias H.F.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Why do we face suffering and Death?

During the time of Jesus, the prophets were the people who sacrificed their life for the sake of their Religion. The idea of Martyrdom was received in the Christianity from the Jewish tradition.

Jesus identified himself with the poor and the oppressed. He loved them to the fullest. For this reason he had to suffer.

Jesus was keen on getting rid of the suffering of the people. He preached them to detach worldly values and to possess kingdom values in order to overcome the suffering.

According to Jesus, Those who love their life lose it, and those who hate their life in this world will keep it for eternal life" (Jn 12:25). Jesus laid down his life for the sake of all. He proclaimed the Good news fearlessly. His sole purpose was to establish the kingdom of God.

Jesus was aware of his brutal death and did not want to run away from it. He foretold his death and resurrection. For the redemption of the humankind Jesus opted to die on the cross. He went through untold suffering and pain and at last conqured the death by being obedient to his father. His father glorified Him on the third day.

***Rev. Bro. T.A. Regikumar OMI***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Holy Spirit in the Epistles of St. Paul

"But you are not in the flesh; you are in the spirit,
since the spirit of God dwells in you.." (Rom 8:9)

After the Lord Jesus Christ, St. Paul the apostle is recognized as the greatest person who explained much on the Holy Spirit. He can be even called the pnuematological theologian. Paul's strong Hellenistic education and classical Jewish background enabled him to understand and express about this 'Third Person' of God, in all his enlightenments that he received.

It is the Holy Sprit who was the guardian and current of the early Church and St. Paul in a special way has easy access to him, so much so all his missionary journeys were directed by the Holy Spirit. Paul could not imagine a Christian without the Holy Spirit ".... Any one who does not have the spirit of Christ does not belong to him..."

The most beuatiful pnuematological understanding of Paul is the "gifts of the spirit" (1Cor 12 :1-11). All the gifts are flowing from the divine potentiality of the Spirit only for the building of the Church and for a common purpose. If there is any gift that does not lead people to Christ but estranges from him, is not coming from the Spirit.

"....Since you are eager for spiritual gifts, strive to excel in them for building up the Church...." (1Cor 14:12).

*Rev. Bro. P. Renard Cherilnes*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. Irenaeus of Lyons

He was the most important theologian of the 2nd c. He can be called the "Father of Catholic Dogma,". He was known for his defense against Gnosticism.

In opposition to the fundamental dualism of the Gnostics, he affirmed unity – One God, One Christ, One Humankind, One Church, and One Faith.

Regarding Trinity he uses the names of three Persons and always places them in the first rank. Word and Spirit are one with God. Regarding Christology, Man is free and sinned freely in Adam, his head Jesus Christ is the new Adam, who recapitulates in himself the whole of man kind and reconciles it with the Father.

When he speaks of Marilogy, Eve listened to the voice of the Devil; Mary gave heed to the voice of the Angel. The human race, sent to its death by a virgin, has been saved by another virgin. It is through her obedience that the Virgin Mary became the advocate of the Virgin Eve.

***Rev. Bro. T. Quinson Fernando***

## அடுத்து வெளிவர இருப்பது

கத்தோலிக்கத் திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டில் 29 ஜீன் 2008 முதல் 29 ஜீன் 2009 வரை உள்ள காலத்தை "பிற இனத்தவரின் திருத்தூதரான தூய பவுலின் இரண்டாயிரம் ஆண்டு" என்று கொண்டாடுமாறு திருத்தந்தை பதினாறாம் பெனடிற் அறிவித்துள்ளார். எனவே இதனைச் சிறப்பிக்கும் முகமாக அடுத்து வர இருக்கும் இறையியல் கோலங்கள் "தூய பவுல்" சம்பந்தப்பட்ட கட்டுரைகளைத் தாங்கி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருச்சபை வரலாற்றுத் துளிகள்"



அமரர் சா.பி. கிருபானந்தன் அடிகள் மரணிப்பதற்கு முன்னதாக தமிழ் கத்தோலிக்க திருச்சபைக்கு **"திருச்சபை வரலாற்றுத் துளிகள்"** என்ற தலைப்பில் ஒரு அரும் பொக்கிஷத்தை தயாரித்து வெளியிட்டிருக்கின்றார். அவருடைய இந்த முயற்சியால் **இறையியல் கோலங்கள்** வாசகர்கள் பயன்பெறும் வகையில் சில துளிகளை எமது இதழ்களில் தொடராக தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## வரலாற்றுத் துளிகள்

### ஆண்டவர்

தொடக்கக் கால சமூகம் இயேசுக்கிறிஸ்துவை ஆண்டவர் என்றே அழைத்தது. ஆண்டவர் என்ற சொல்லின் அடிப்படை கிரேக்க சொல்லான கிரியோஸ். இயேசுவின் வரையறையில்லாத மகிமையை எடுத்துக்காட்டவும் கடவுளுக்கு இணையானவர் என்பதை அறிக்கையிடவும் இயேசு நம் ஆண்டவர் என்ற சொல் பாவனையில் வந்தது.

### ஆண்டவரின் திரு உடலும் இரத்தமும் பெருவிழா

பெல்ஜியம் நாட்டிலுள்ள லீயேஜ் நகரத்தின் அகுஸ்தீனிய பெண் துறவியான யூலியானாவின் இடைவிடாத கோரிக்கையால் 1246 இல் பெல்ஜியம் லியெச் மறைமாவட்ட ஆயரான றொபேட் மறைமாவட்டப் பேரவையைக் கூட்டி இவ்விழாவை மறைமாவட்டங்களில் கொண்டாடப் பணித்தார். அக்காலங்களில் தல ஆயர்கள் தமது மறைமாவட்டங்களில் திருவிழாக்களை உருவாக்க முடியும். ஆயர் றொபேட்டுடன் தலைமை தியாக்கோனாக கடமையாற்றிய ஜயக்குஸ் பன்ரலியொன் பின்னர் 4வது ஊர்பான் என்ற திருத்தந்தையான போது இவ்விழா அனைத்து திருச்சபையிலும் ஆடம்பர நற்கருணைப் பவனியுடன் இவ்விழா கொண்டாடும் வழக்கம் இதிலிருந்து முகிழ்ப்புப்பெற்றது. திருச்சபை பெரிய வியாழக்கிழமை நற்கருணை ஏற்படுத்தப்பட்ட விழாவைக் கொண்டாடுகிறது. தூய வாரகாலம் இயேசுவின் மரணத்தோடு தொடர்புபட்டதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவை மௌனப் பின்புலத்தில் திருச்சபை திருவழிபாட்டில் கொண்டாடும் வழக்கம் உள்ளது. இதனால் ஆண்டவரின் உடல், இரத்தப் பெருவிழா உருவானது.

இவ்விழாவுக்கான திருபுகழ்மாலை, மற்றும் பாடல்களை உருவாக்கும்படி தூய அக்குவினா தோமாவை திருத்தந்தை 4வது ஊர்பான் பணித்தார். இன்றும் எமது வழிபாடுகளில் பாடப்படும் அன்பும் நட்பும் எங்குள்ளதோ?, பாடுவாய் நாவே, மாண்புயர், புகழ்வாய் யெருசலேமே போன்ற பாடல்கள் தூய அக்குவினா தோமா இயற்றிய பாடல்களாகும்.

## ஆண்டவரின் திரு இருதயம்

மானிடத்தின் மீது ஆண்டவரின் அன்பை வெளிப்படுத்தும் அடையாளமாக திரு இருதய பக்தி உள்ளது. திருத்தந்தை 11வது பியூவின் அக்லேரியும் பிடேஸ் என்ற திருமடலால் கத்தோலிக்க திருச்சபையில் மிகவும் உயிரோட்டமான பக்திமுறையாக நவீன வரலாற்றுக் காலங்களில் பதிவாகியது. தூய மார்கிற் மேரி அலெகொக் அனுபவித்த திரு இருதய அருட்காட்சியினால் இப்பக்தி பிரான்ஸ் கத்தோலிக்கர்கள் மத்தியில் தோற்றம் பெற்ற இப்பக்திமுறை குறிப்பாக இயேசு சபை மறைப்பணியாளர்களால் பரப்பப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும், வீட்டிலும் ஒவ்வொருவரின் இதயத்திலும் இறையாட்சியினைக் கட்டியெழுப்ப திரு இருதயப் பக்தி வலுவான அடித்தளமாக உள்ளது என திருத்தந்தை 12வது பியூ கூறியுள்ளார். ஒவ்வொரு வீட்டிலும் திரு இருதய ஸ்தாபம் செய்வதும் குறிப்பாக குடும்பத்தை திரு இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தல் போன்ற சடங்குகள் கத்தோலிக்க மக்கள் மத்தியில் வலுவான அடையாளமாக உருவானது.

## ஆணை ஓலை

திருத்தந்தையின் அதிவலுமிக்க ஆவணமாகும். இதை இலத்தீனில் புள்ளும் என அழைப்பர். முன்னைய காலத்தில் அரசர்கள் அனுப்பும் ஆணை ஓலை முறையிலிருந்து உருவானது. 1627இல் திருச்சபையிலிருந்து விலக்கி வைக்கும் பெயர்களை குறிப்பிடும் முறை மூலம் ஆணை ஓலை முறையை திருத்தந்தை 3வது ஊர்பான் தொடங்கிவைத்தார். திரிபுக் கொள்கைப் பரப்புவோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியர் பக்கம் நிற்பவர்கள், திருப்பீட அதிகாரத்தில் உள்ளவர்களை தவறாக நடத்துபவர் எனப் பட்டியலிடும் வழக்கம் காணப்பட்டது. 1773ப்பின் திருத்தந்தை 13வர் கிளமென்ற பொதுப்பட வெளியிடும் முறையை இல்லாமலாக்கினார்.

## ஆயிரமாண்டு ஆளுகைக்காரர்

1000ம் ஆண்டில் இயேசு மீண்டும் வந்து தனது அரசை இவ்வுலகில் நிறுவுவார் என்ற எதிர்பார்ப்புக் கொண்டவர்களை ஆயிரமாண்டு ஆளுகைக்காரர் என அழைப்பர். தொடக்ககால கிறிஸ்தவர்கள் இயேசுவின் உடனடி வருகையை எதிர்பார்த்தனர். இவ் எதிர்நோக்கு யூதமதத்திலிருந்து உள்வாங்கப்பட்டதாகும். ஆயிரமாண்டு ஆளுகை பற்றிய எதிர்பார்ப்பு புதிய ஏற்பாட்டின் இறுதியில் உள்ள திருவெளிபாடு நூலில் காணப்படுகிறது. 1000 ஆண்டில் சாத்தானின் ஆட்சி தூக்கி எறியப்படுவதுடன் மறைசாட்சிகள் உயிர்ப்பிக்கப்பட்டு இயேசுவோடு ஆயிரமாண்டு அரசாள்வார்கள் எனவும் திரும்பவும் சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டு நாடுகளை ஏமாற்றுவான் இறுதியில் வெல்லப்படுவதுடன் இறந்தோர் அனைவரும் இறுதி தீர்ப்புக்காக ஒன்று சேர்க்கப்படுவர் எனக் குறிப்பிடுகிறது. ஆயிரமாண்டு ஆளுகைபற்றி பல வேறு விளக்கங்கள் உருவாகியுள்ளன. இரண்டாவது வருகையோடு ஆயிரமாண்டு நீதியாட்சி தொடரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளவர்களை முன்னாயிரமாண்டுக்காரர் எனவும் மற்றைய கருத்துள்ளவர்களை பின்னாயிராண்டுக்காரர் எனவும் அழைப்பர். தற்போதைய உலகில் காணப்படும் செல்வங்களை அனுபவிப்பர் என்ற எதிர்பார்ப்பு ஆயிரமாண்டு ஆளுகைக்காரர்கள் மத்தியில் காணப்படும் பொதுவான எதிர்பார்ப்பாகும். இவ்வகையான திரிபு மொன்றானிச திரிபுக்கொள்கைக்கு இட்டுச்செல்லும் ஆபத்து உள்ளது. மிலான் சாதனத்தின் பின்னாலான திருச்சபையின் அமைப்பில் இச்சிந்தனை பெரிதாக இடம் பெறவில்லை. மேற்கத்தைய பெரும் இறையியலாளரான தூய அகுஸ்தீன் ஆரம்பக்காலங்களில் இவ்விதக் கொள்கையை கொண்டிருந்தார். எபேசு சங்கம் இவ்வித எதிர்பார்ப்பை தவிர்க்கவேண்டும் எனக் கூறியது. சீர்திருத்தக் காலத்தில் ஆர்வக்காரர்கள் இத்திரிபுக் கொள்கையை வலியுறுத்தினர். இன்றும் பல அடிப்படைவாதச் சிறுமங்கள் இத்திரிபுக்கொள்கைகளை வலியுறுத்துவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்மீனியன் சடங்குமுறை

ஆர்மீனியா துருக்கிக் கிழக்குப் பக்கத்தில் இருந்த நாடாகும். முதல் நூற்றாண்டிலிலேயே நற்செய்தியை பெற்றுக் கொண்டனர். 4வது நூற்றாண்டில் கிறிஸ்தவம் அரச மதமாக மாறியது. ஆர்மீனியன் மொழியில் தூய யாக்கோபுவின் அந்தியோக்கிய சடங்கு முறையே இங்கு நடைமுறையில் உள்ளது. 11வது நூற்றாண்டில் ஏற்பட்ட அழிவின் பின்னர் தென் துருக்கி பகுதியிலுள்ள சிலிசியாவுக்கு இடமாறினர். அதனால் இன்று ஆர்மீனிய திருச்சபையின் மறைதந்தையை சிசிலிய மறைதந்தை என அறியப்படுகின்றார். கல்சிடோன் பொதுச் சங்கத்தில் ஆர்மீனியத் திருச்சபை திரிபுவாதத்துக்கு ஆளானது. 1439இல் புளோரன்ஸ் பொது சங்கத்தில் மீண்டும் ஒப்புரவானது. திருத்தந்தை 14வது பெனடித்து முதலாவது மறைதந்தையை அங்கீகரித்தார். முதலாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் துருக்கியர் இரண்டு கோடி ஆர்மீனியரை படுகொலை செய்தனர். ஆர்மீனிய திருச்சபையின் பல நம்பிக்கையாளர்கள் தற்போது லெபனானில் உள்ளனர்.

## ஆராதனையா? வணக்கமா?

கடவுளின் மகிமையை, அவரது இலட்சணங்களை, இரட்சணிய வரலாற்றில் அவரது பிரசன்னத்தை உடலாலும், உள்ளத்தாலும் ஏற்று மன்றாட்டுரீதியான புகழ்தலை ஆராதனை எனலாம். அவை குழுவாகவோ அல்லது தனிப்பட்டரீதியான செயற்பாடாகவோ இருக்கலாம். இவ்வகைச் செயற்பாடுகள் ஊடாக மானிடம் கடவுளில் முற்றுமுழுமையாகத் தங்கியிருத்தலை வெளிப்படுத்துகிறது. ஆராதனையை திருச்சபை இலத்தீன் மொழியில் லத்திரியா என வேறுபடுத்துவதோடு புனிதர்களுக்கான மனித செயற்பாடுகளை வணக்கம் அதாவது இலத்தினில் டியூலியா எனவும் மீட்புத்திட்டத்தில் சிறப்பிடம் பெற்ற அன்னை மரியாவுக்கு உயர் வணக்கம் கைப்பர்டுலியா என விவரப்படுத்தியது. இவ் இறையியல் கருத்தாக்கம் ஸ்கொலாஸ்ரிக் இறையியலாளர்களால் வரையறுக்கப்பட்டது. தூயவர்களுக்கான அதீத வணக்கம் குருட்டுப் பக்தியை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைத் திருமுறைகள்

பொது விவிலியத்தில் இணைத் திருமுறைகள் எனச் சில நூல்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கிடையில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஜேர்மன் சீர்திருத்தத்தை முன்னெடுத்த மாட்டின் லூதர் மொழிபெயர்த்த ஜேர்மன் விவிலியத்தில் சில பழைய ஏற்பாட்டு நூல்களே வாசிக்கத் தகுந்தவையாக இருப்பினும் திருமுறைக்கு உட்படாதவை என்ற நியாயப்பாட்டில் திருமுனைப்புற நூல்கள் எனப்பட்டியலிட்டார். 1546இல் திரிதெந்து பொதுச்சங்கம் இவை திருஏவுதலால் எழுதப்பட்டவை என அதிகாரபூர்வமாக அறிவித்தது. இவற்றை இணைத் திருமுறைகள் என அழைப்பர். இதனால் திருமுறைக்குள் திருதுறை என்ற கருத்தாக்கம் உருவானது. பொது விவிலியத்தில் பட்டியலிடப்பட்டுள்ள

**இணைத்திருமுறை நூல்கள் :**

| | |
|---|---|
| தோபித்து | யூதித்து |
| எஸ்தர் (கி) | சாலமோனின் ஞானம் |
| சீராக்கின் ஞானம் | பாரூக் |

**தானியேல் இணைப்புகள்**

1. இளைஞர் மூவரின் பாடல்
2. சூசான்னா கதை
3. பேல் தெய்வமும் அரக்கப்பாம்பும்

## இயேசு கிறிஸ்து

இயேசு என்பதுதான் இயற்பெயர். எபிரேய மொழிப்பெயரான யோசுவா என்னும் பெயரை அடியாகக் கொண்டது. யோசுவா என்னும் பெயர் நசரேத்தூர் இயேசுவின் காலத்தில் பொதுவான பாவனையில் உள்ள பெயராகும். நசரேத்தூர் இயேசுவை கடவுள் உயிர்பித்ததனால் கிறிஸ்துவாக்கப்பட்டவர் என்ற விசுவாசம் தொடக்ககால திருச்சபையின் மைய நம்பிக்கையாகும். யாவே எனது இரட்சணியம் என்ற யூதப்பின்னணியில் இயேசு அபிஷேகம் செய்யப்பட்டவர் என்னும் அர்த்தத்தில் கிறித்தோஸ் என்ற கிரேக்க சொல் தொடக்க திருச்சபையில் அதன் நம்பிக்கையை வெளிப்படுத்தும் தலைப்பாகியது. தொடக்கக்கால திருச்சபை நசரேத்தூர் இயேசு தான் உண்மையன இரட்சகர் என்று அறிவித்தது. இயேசுவைக் கடவுள் ஆண்டவரும், மெசியாவுமாக்கினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருதூதுவர் பேதுரு தனது முதற் போதனையில் அறிக்கையிடுவதைத் திருத்தூதர் பணி நூலில் காணலாம். (தி.ப. 2:36)

## இயேசு மன்றாட்டு

இயேசு மன்றாட்டு கிழக்கத்தய மரபுமீறாத் திருச்சபையின் உருசியா துறவறத்தினரிடையே மிகவும் பிரபலமான மன்றாட்டு முறையாகும். மேற்கத்தைய திருச்சபையில் செபமாலை பக்தி வெகுஜன வடிவமான மன்றாட்டுப் போல கீழைத்தேய திருச்சபையில் இயேசு மன்றாட்டு எனத் திருத்தந்தை 2ம் யோவான் பாவிலு குறிப்பிட்டார். மன்றாட்டு முறைமை சுவாசம் உள்வாங்கலின்போது "இயேசுவே இறைமகனே என் மேல் இரக்கம் வையும்" என்ற சுருக்க வடிவிலான மன்றாட்டை மனதினில் சொல்லுதல் வேண்டும்.

சுவாசம் வெளியேற்றப்படும் போது "என்மேல் இரக்கமாயிரும்" என்ற பதிலுரையே மனதில் ஏறெடுக்கும் மன்றாட்டு முறையாகும். மன்றாட்டின் சுருக்கவடிவ பாடத்தில் பல வேறுபாடுகள் இருந்த போதிலும் "பாவி என் மேல் இரக்கம் வையும்," என்ற வடிவம் இரஸ்சிய திருச்சபையின் சேர்ப்பாகும். சுருக்க வடிவிலான மன்றாட்டு மாற்: 10 : 47-48, லூக், 23:42 ஆகிய நற்செய்திப் பகுதிகள் வேண்டுதலையும், 1 கொரி 12:3 மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது போற்றுதலையும் பிரதிபலிக்கின்றது.

இம் மன்றாட்டு முறை இடைவிடாமல் மன்றாடுதல் அதாவது ஹசிக்கும் என்ற துறவற இலட்சியத்தின் பின்புலத்தில் தோற்றம் பெற்ற மன்றாட்டு முறையாகும். மேற்குத் திருச்சபையில் செபமாலைப் பக்தி முயற்சி உள்ளதுபோல் கிழைத்தேய திருச்சபையில் கிறிஸ்து செபம் வலுவான பக்தி முயற்சியாகும். இதை ஜெபம் எனவும் அழைப்பர்.

## இரட்சணிய சேனை

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியைத் தொடர்ந்து மக்கள் விவசாய உழைப்புக்குப் பதிலாக தொழிற்துறையை மாற்றீடாக் கொண்டபொழுது பெரும் நகரங்களில் சேரிப் புற வாழ்வு பெருகத் தொடங்கியது. இங்கிலாந்து நாட்டின் சட்டமைப்பில் ஏழைகளுக்கான சட்ட திட்டங்கள் பெரிதும் இல்லாததால் ஏழைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தள்ளப்பட்டனர். குறிப்பாக அங்கிலிக்கன் சபையின் வழிபாடு, உருவாக்கம், மற்றும் அன்புப் பணிகள் போன்றவற்றிலிருந்து இவர்களது புறம்போக்காக்கப்பட்ட நிலை இருந்தது. 1865 இல் வில்லியம் பூத் அவர்களாலும் மற்றும் பாரியார் கத்தரின் அம்மையாலும் இலண்டனின் ஈஸ்ட் எண்ட் பகுதியில் ஒரு எளிமையான கூடாரத்தில் இரட்சணிய சேனைப் பணி தொடங்கியது. திருநிலைப்படுத்தப்பட்ட பணியமைப்பை தழுவிக்கொள்ளாது இராணுவ நிர்வாகக் கட்டமைப்பே இரட்சணிய சேனையின் பொதுவான பணியமைப்பாக ஏற்றது. பல தனிப்பட்டவர்களின் வாழ்வு முறையை சீர்திருத்தியதோடு உலகம் பூராவும் மிகச் சிறந்த அறப்பணிக் கட்டமைப்பைக் கொண்டுள்ளமை அவர்களின் சிறப்பாகும். விவிலியத்தை தமது மறைக்கோட்பாடாக மட்டும் கருதுவதோடு முழுமையாக இராணுவ கட்டமைப்பை பேணுவதால் கல்வீனிச லூத்தரன் ஏற்பாட்டுத்தன்மையை முழுமையாக மறுக்கின்றனர். இராணுவ முறையை ஒத்த வாத்தியக் குழுவின் இசை பொது மக்களை தமது பால் ஈர்க்கும் முறை கவர்ச்சிக்குரியது.

### இரட்சணிய யாத்திரிகம்

1894இல் வெளிவந்த இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூல் ஜான் பன்யன் என்ற ஆங்கில நாட்டவர் எழுதிய மோட்ச பிரயாணம் என்ற ஆங்கில உரைநடை நூலின் கதையமைப்பினை தழுவி கிறிஸ்தவக் கம்பன் என்று அழைக்கப்படும் கிருஷ்ணபிள்ளை என்னும் கவிராயரால் செய்யுள் வடிவில் பாடப்பட்ட காப்பியமாகும்.


**இறையியல் கோலத்தை அறிமுகம் செய்யுங்கள்**

**"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"**

**நீங்கள் படித்து, சுவைத்து, பயன் அடைந்த இவ்விதழை உங்கள் நண்பர்களுக்கும், ஏனையவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் சந்தாதாரராகச் சேரும்படி ஊக்குவியுங்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 28

### முடிவுகள்

சரியான விடைகள்:

இடமிருந்து வலம்

1. யோசேப்பியல்
7. வார்த்தை
19. கட்டுக்கரை
26. உபநிசாத
32. கொன்சாந்தி

மேலிருந்து கீழ்

1. யோவான்
6. உரையாடல்
19. கருவி

### பரிசு பெறுவோர்

1ம் பரிசு :

செல்வி த. மேரிலிசி
4ம் வட்டாரம்,
முள்ளியவளை.

2ம் பரிசு :

அ. மீரா
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

3ம் பரிசு :

ஞா. ரெமில்டா
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறும் ஏனையோர்

ஜெயா செபமாலை
திருக்குடும்ப கன்னியர் மடம்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 (X) | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 (X) | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 (X) |

அனுப்புபவரின் பெயர் : ..............................

விலாசம் : ..............................

### இடமிருந்து வலம் :-

1. தொடர்பு ________ உண்மைத்தன்மையை கொண்டிருக்க வேண்டும் (6)
15. சிறையில் இருப்பவர் (2)
19. இவர் வீட்டில் எல்லாமே கவிபாடும் (4)
31. இவ்விதழின் இறையியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலிருந்து கீழ் :-**

1. பாவங்களை மறைத்து <u>இவற்றை</u> அழித்து கௌரவமாக வாழுகின்றார்கள் (5)
2. காலைநிலைகளில் <u>இது</u> மாறுகிறது (4)
6. கிளி பாதர் குரல்வளையால் ஏந்தியவை தலைகீழாயுள்ளன (5)
9. இயேசுவின் ஆட்சியின் <u>இந்த</u> சொல்லுக்கே இடமில்லை (4) குழம்பியுள்ளது
10. தொடக்கம் (2)
11. தூய பவுல் பற்றிய கட்டுரை ஆசிரியரின் இறுதிப்பெயர் (5)
20. காயம் தலைகீழாயுள்ளது (3)

- **விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.**
- **விடைகளில் பல இவ்விதழின் கட்டுரைகளில் உள்ளன.**
- **விடைகளை அனுப்ப மேலுள்ள கூப்பனை மட்டுமே பாவிக்கவும்.**
- **விடை வந்து சேரவேண்டிய இறுதி நாள் 15.10.2008.**

**முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 29**

**இறையியல் கோலங்கள்,**
**தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பங்கில் எங்கள் முகவர்கள் :

| பங்கு | முகவர்கள் |
| --- | --- |
| 1.இளவாலை மாரீசன்கூடல் பங்குகள் | திரு. பே. றொனிபஸ் |
| 2. மானிப்பாய் பங்கு | செல்வி. அ. ஜெயசுதா |
| | செல்வன். சிவசங்கர் |
| 3. ஆனைக்கோட்டைப்பங்கு | R. புஸ்பநாயகி |
| | P. கவிதா |
| 4. நாவாந்துறை பங்கு | திருமதி. செ. செல்வன் |
| | செல்வி ரூபா |
| 5. சுண்டுக்குளி பங்கு | செல்வி. லூட் றொய்சியா லூர்துநாயகம். |
| | செல்வி. றொயிற்றா சாந்தினி செல்வநாயகம். |
| 6. பாண்டியந்தாழ்வு பங்கு | திரு. மரியநாயகம் |
| 7. பாசையூர் பங்கு | செல்வி. றொ. தனூசியா |
| 8. அரியாலைப் பங்கு | செல்வி. ஜெயா |
| 9. சக்கோட்டைப்பங்கு | செல்வி. சு. நேசநாயகி (சுகி) |
| | செல்வி. எ. லூயின் கொன்சேகா |
| 10. உரும்பிராய் பங்கு | செல்வி. டல்சி |
| | செல்வி. இந்துசா |
| 11. குருநகர் பங்கு | செல்வி. சகானா |

A.C.M. Press, No. 464, Hospital Rd, Jaffna. T.P. 021 222 9102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 160/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 50/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 160/=
Foreign (Incl. postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs. 50/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145

Registered No. QD/79/News/2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org